உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] வெகுதானிய ௵ ஆனி ௴ [பகுதி-அ.
Vol. 35. June—July 1938. No. 8.

பழனிக்கோவை.

[குறிப்பு:—செந்தமிழ் தோன்றியநாண்முதற் பல சிறந்த தமிழ் நூல்களை அநுபந்தமாக வெளியிட்டுவருகிறது. அம்முறையிற் சில ஆண்டுகளாக வெளியிடப்பெற்றுவந்த குருகைமான்மியமூலம் கிடைத்தவரை ஒருவாறு சித்திரைப் பகுதியுடன் முற்றுப்பெற்றுள்ளது. அடுத்து ஆடிப்பகுதிமுதல் குருகைமான்மியத்தின் குறிப்புரை முதலியவை வெளியிடப்பெறும்.

இனிச் செந்தமிழ்ப்பிரசுரமாக எதை வெளியிடலாமென்று சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ள ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்துவரும்போது பழனிக்கோவை என்று தலைப்பிட்ட ஓரேடு அகப்பட்டது. அதையெடுத்துப் படித்ததில் அது, பழனிமலையில் அமர்ந்துவிளங்கும் முருகப்பெருமான்மீது நானூறு செவ்விய செய்யுளால் இயற்றப்பெற்ற அகப்பொருட்கோவையாயிருந்தது.

அதை யியற்றினோர்பெயர்முதலிய விவரமொன்றும் அதுகொண்டு இப்பொழுது அறிய இயலாமற்போயினும், அதன் தலைப்பு 'பழனிக்கோவை' 'இறையனார் பொருள்விளக்கம்' என்று எழுதப்பட்டிருந்ததனாலும், அதன் இறுதியில் வரையப்பட்டுள்ள,

'மாணிக்க வாசகர் வாய்மலர்ந் தன்றுமன் றுடினர்மேற்
பேணிக் கோளச்சொன்ன கோவையி லேபற்றிப் பின்படர்ந்து
வேணிக்கங் காநதி யீன்றோர் பழனிச்சேவ் வேள்கடம்பிற்
பாணிக்கொள் வேலிற் படர்ந்திந்தக் கோவை பழுத்ததுவே'

*

என்னும் செய்யுளாலும், அதன் அமைப்புமுறையாலும் அது இறையனார்களவியலுக்கு இலக்கியமாகத் திருச்சிற்றம்பலக் கோவையை அடியொற்றி இயற்றப்பட்டதென்று புலனாகிறது.

அது, இடையிடையே சிதைந்திருப்பதால் அவ்வொரே பிரதியினுதவிகொண்டு அதனைப் புத்தகரூபமாக வெளியிடமுடியவில்லை. ஆயினும், மேலும் சிதைந்தழியாது பாதுகாக்கவும், அதன் கவிச்சுவையைச் செந்தமிழ்நேயரும் துய்க்குமாறு செந்தமிழில் மாதந்தோறும் சிலசில பகுதிகளாக வெளியிடவும் நினைந்து இப்பொழுது அதன் முதலிரண்டுபகுதிகள் ஏட்டிலுள்ளவாறு பதிக்கப்பட்டன. இந்நூற்பிரதியுடையார் கொடுத்துதவுவார்களாயின் ஆராய்ந்து புத்தகமாக வெளியிடலாகும். உதவிப்பத்திராசிரியர்.]

பூமாது சேர்திருமால் பொன்னுலகோர் போற்றவருங்
கோமான் குகன்பழனிக் கோவைசொலத்—தேமாங்
கனிதனை வேண்டியன்று கண்ணுதலைச் சூழ்ந்த
புனிதனை நன்னெஞ்சே போற்று. (1)

பொருப்புருவ வேலெடுத்த புங்கவனீ ராறு
திருப்புருவ வேள்பழனிச் செவ்வேள்—சுருப்புருவ
மானநாள் வாய்ந்தசுவை யாமே யடியேற்கு
மானனாள் வாணிதரும் வாக்கு. (2)

செப்பிர மணிய லாகாமற் சைவந் திருந்துமின்சு
வப்பிர மணியக ரானைத்தெண் டிப்பிர மானிடரே
யப்பிர மணிய மாம்வல் லவையை யணைபழனிச்
சுப்பிர மணிய கணேசன பாதந் துணையென்னவே. (3)

பழனிக்கோவை.

இறையனார்பொருள் விளக்கம்.

1 இயற்கை பாங்க னிடந்தலை மதியுடன்
இருவரு முளவழி யவன்வர வுணர்தல்
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
நன்னிலை நாண நடுங்க நாட்டம்
மடல்குறை நயப்பு வழிச்சேட் படுத்தல்

இடமிகு பகற்குறி யிரவுக் குறியோ
டொருவழித் தணத்த லுடன்கொண் டேகல்
வரைவு முடுக்கம் வரைபொருட் பிரிதல்
மணஞ்சிறப் போதல் வார்புவி காவல்
இணங்கலர்ப் பொருத்தற் கேகல் வேந்தர்க்
குற்றுழி பொருள்வயிற் பரத்தையிற் பிரிதலென்
றருள்வயிற் சிறந்த வைந்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி யிவையென மொழிப.

க. இயற்கைப்புணர்ச்சி.

2 அவற்றுள், காட்சி யையர் தெளித னயப்பே
யுட்கோ டெய்வத்தை மகிழ்தல் புணர்ச்சி
துணிதல்கைக் கிளையொடு கலவி யுரைத்தல்
இருவயி னொத்தல் கிளவி வேட்டல்
நலம்பா ராட்டல் பிரிவுணர்த் தலொடு
பருவர லறித லருட்குண முரைத்தல்
இட மணித்துக் கூறிவற் புறுத்தல்
ஆடிடத் துய்த்தல் அருமை யறிதல்
பாங்கியை யறித லெனவீ ரொன்பான்
நீங்கா இயற்கை நெறியென மொழிப.

1. காட்சி.

நீர்தாங்கு சைவலஞ் செவ்வல்லி தாமரை நீலமுத்தம்
ஏர்தாங்கு சங்கு குமிழுந்தி பொன்கொண்டொ ரேந்தல்வல்லி
சீர்தாங்கு கந்தர் திருவாவி னன்குடிச் சேண்சுனைபோற்
கார்தாங்கு கூர்மம் வரால்ஒன் டராவொடுங் கண்ணுற்றதே. (1)

மதிவாணுதல் வளர்வஞ்சியைக் கதிர்வேலவன் கண்ணுற்றது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

2. ஐயம்.

பூவும் புனலுங் குளிரிளந் தென்றலும் பொன்மலர்ப்பூங்
காவுஞ் சிறந்த திவரோ விவரென்னிற் காமருசீர்
மேவும் பழனிச்செவ் வேளரு ளான்முன் விரும்புமிடம்
யாவுங் கொணர்ந்தன ரோவடை யாளமென் றிம்பர்க்குமே. (2)

தெரியவரியதோர் தெய்வமென்ன அருவரைநாடனையுற்றது.

மெய்ப்பாடு—உவகைபைச்சார்ந்த மருட்கை. பயன்—ஐயந்தீர்தல்.

3. தெளிதல்.

பொருபூதர் போற்று முருகோர் வையாபுரிப் பூங்கொடியில்
ஒருபூவைச் சேர்ந்த திருபூமற் றெண்டிக்கு மோடிமுகிழ்ந்
திருபூ மலர்ந்ததென் றேதிப்பல் பூவெழில் வாடலினீ
டருள்பூண் வில்லங்கத் தரோவணங் கேதென் றளிசொல்லுமே. ()

அணங்கல்லளென் றயில்வேலவன் குணங்களைநோக்கிக் குறித்துரைத்தது.

மெய்ப்பாடு—மருட்கையினீங்கிய பெருமிதம். பயன்—தெளிதல்.

4. நயப்பு.

கரும்பனும் போற்றுங் குழகோர் பழனியிற் காண்டிநெஞ்சே
தரும்பெரும் பாதலஞ் சொற்கமுண் டேலந் தரமிலதோ
பெரும்பணி யாங்கது மூன்றையுந் தாங்கவிப் பெண்கொடிதன்
னரும்பிளங் கொங்கைக் கிடைக்கொடி வாடுவ தற்புதமே. (4)

வண்டமர்புரிகுழ லொண்டொடிமடந்தையை
நயந்தவண்ணல் வியந்துள்ளியது.

மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்தமருட்கை. பயன்—ஐயந்தீர்ந்துமகிழ்தல்.

5. உட்கோள்.

வாரும் பழகி வடமுந் திகழ்முலை வல்லிகண்கள்
போரும் பழநட்பும் போன்றெம்மைப் பார்த்தல் புரந்தரற்குச்
சூரும் பழனிச்செவ் வேளும் பரிட்சித்தின் றொன்மையநாட்
சேரும் பழுமரத் திற்கர வோடந்தண் செல்வனுமே. (5)

அமரர்த்தாங்குங் குமரக்கடவுள் வாளனகண்ணியுட் கோளவனுணர்ந்தது.

மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகள் குறிப்பறிந்து மகிழ்தல்.

6. தெய்வத்தைமகிழ்தல்.

எந்தர மோவும்பர் வெம்பசி தீரவெண் ணூந்திருமால்
மந்தரம் பாற்கடல் சேர்த்திய போன்மலை யைப்பகுந்தாங்
கந்தர வான்கங்கை கண்டோர் பழனியன் ஞாலையிங்குத்
தந்தா ணர்செய் யருட்குக்கைம் மாறென்ன தான்செய்வனே. (6)

ஆரமிர்தன்ன வரிவையைத்தந்த வோர்பெருந்தெய்வத்தை யுவந்துரைத்தது.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த மருட்கை. பயன்—மகிழ்தல்.

7. புணர்ச்சிதுணிதல்.

செதிழுற நைந்துசெந் தேனிற் கனிந்த செழுங்கனியொன்
றுதிர்வுழிப் பாற்குட மேந்துவ போலொக்க னீக்கியுய்க்கும்
விதிதுணை கூர்மதி யேதுணி வாய்செய்ய வேள்பழனி
மதிநுத லாண்மணங் காந்தர்ப்பம் போல்வந்து வாய்த்ததுவே. (7)

மணச்செயலளாய மனத்தொடுதெய்வப்
புணர்ச்சியவள்வயிற் புரவலன் றுணிந்தது.

மெய்ப்பாடும் பயனும் மேலது.

8. கலவியுரைத்தல்.

ஆதித் தனுங்கண் ணும் போற்றெய்வங் கூட்டக்கண் டப்புமுப்பும்
பேதித் திடாதென்ன நானிவ ளாம்பண்பு பெண்பயிலும்
பாதித் தனுவர் தருவேள் பழனிப்பைஞ் சோலைத்தென்ற
ஞதித்த பாண்சுரும் பல்லான்மற் றரிங்கு நாடுவரே. (8)

அலர்முலைதன்னொ டயில்வேலண்ணல் கலவியினலமை கருதியுரைத்தது.

மெய்ப்பாடு—மகிழ்ச்சி. பயன்—தலைமகளை மகிழ்வித்தல்.

9. இருவயினொத்தல்.

புதுமன்ற லங்குழன் மங்கைதன் கொங்கைப் புணர்ச்சிவிது
விதுவென் றெதிர்த்துண் கரும்பாய்ப் பழனிச்செவ் வேள்புகழ்ப்பா
முதுபைந் தமிழி னணிவாய்ந் தவனன்பர் மூழ்கமிர்தின்
மதுரம் பரந்தவன் றேட்கடம் பாக மணக்கின்றதே. (9)

அளவிலின்பந் திளையாநின்றவன் தளரிளமடந்தையை யுளமகிழ்ந்துரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

10. கிளவிவேட்டல்.

பொய்கையில் வானவர்க் கெட்டாப் பிழம்பொளி போன்றுதித்த
மொய்கையில் வேலர் பழனியன் னாள்கண் முகமிதழ்தோள்
செய்கையி லென்கண் முதனைன்கை யூட்டச் செவிபசித்து
நைகையில் யானமிர் துண்பன்கொல் லோவெதிர் நண்ணினுமே.

ஆய்மயிலன்ன ளவயவம்புகழ்ந்தோன்
வாய்மொழிகேட்க வருந்தியுரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நயப்புணர்த்துதல்.

11. நலம்புனைந்துரைத்தல்.

போர்வாட்கைத் தென்னன் கருத்தையங் தீரப் புராரிகொங்கு
தேர்வாழ்க்கை யென்றும்மைத் தேர்ந்தான் பழனிச்செவ் வேள்கடப்பந்
தார்வாழ்க்கை வாழ்வரி வண்முகத் தாம்பற் றடமலர்போற்
கூர்வாட்கண் போன்மலர் கண்டால்வண் டொன்றுகூறுமினே. (11)

பொற்றொடியைப் புனைநலம்புகழ்ந் துற்றவோகையா னுறுகணீங்கியது.

மெய்ப்பாடு—மகிழ்ச்சி. பயன்—நயப்புணர்த்தல்.

12. பிரிவுணர்த்தல்.

துருவற்கு மந்தப் பகீரதற் குந்தெய்வத் தொன்மைநன்மை
மருவற்கு வாய்த்த மலைநதி போல்வந்த மானனையாய்
இருவர்க் கினியர்வை யாபுரி வேல ரிணையடிகண்
டொருவற்கு மெண்ணினர் போலுன்னை நான்பிரிந் துய்வதுண்டே.

ஆதரவகலே னகலேனென்றவன் பேதைமாதர்க்குப் பிரிவுணர்த்தியது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—பிரிவச்சமுணர்த்துதல்.

13. பருவரலறிதல்.

ஒருவே லெடுத்து வருவேள் பழனி யுறூரிற்சென்றூன்
மருவேனென் றேவைகி லேதமென் றேமுகம் வாடுமந்தோ
திருவே மடப்பிடி யேயன்ன மாதின் றிருவுளந்தான்
பொருவே றிலக்குவன் புன்மூரல் போலையம் பூட்டியதே. (13)

பிரிவுணர்பேதைதன் பருவரல்கண்டு புனைமலர்த்தாரோன் நினையலுற்றது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த மருட்கை. பயன்—ஐயந்தீர்தல்.

14. அருட்குணமுரைத்தல்.

திடங்கொண்ட சூர்வென்ற வையா புரித்தெய்வஞ் சேர்த்தமணம்
வடங்கொண்ட கொங்கைமற் றியார்பிரிப் பார்பனி மாமதியாற்
றடங்கொண் டழுகிய சந்திர காந்தத்திற் றண்புனலை
யிடங்கொண் டெவர்தடுப் பார்விடுப் பாரென்கொ லேங்குவதே. ()

பொருத்தங்கூட்டிப் புரிந்ததெய்வத்தின்
அருட்குணமுண்மை யண்ண லுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—அவன் போந்து பெரியதோருவகை மீதூர அவ்வுவகை வற்புறீயினு னென்பது.

15. இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

தடித்தொடு காரன்ன சேவன் மயூரந் தண்டார்ப்பழனி
வடித்தகு தேனில் வயங்குசொல் வாய்மயங் கேல்கழைகள்
வெடித்துதிர் நித்தில மாலையைப் பூண்டுங்கள் வெற்பினுக்குக்
கொடித்துகி னீட்டி யுடுத்துமெம் மூர்மணிக் கோபுரமே. (15)

மணித்தடமுலையை வற்புறுத்தி யணித்திடத்திருக்கை யாங்கவனுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இடமணித்தென் றுவற்புறுத்தல்.

16. ஆடிடத்துய்த்தல்.

பறிந்துபின் சேருமுன் கைப்பந்து போலவும் பைந்தமிழ்நூல்
அறிந்து மறந்தவன் றேர்ந்தது போலவு மாடல்வெஞ்சூர்
முறிந்துமுன் னீர்புகக் கண்டோர் பழனியின் முன்னிற்பின்யான்
செறிந்துநின் கண்ணிற் கரந்திங்குத் தோன்றுவன் சேயிழையே.

வாடிடைப்பேதையை யாடிடத்துய்த்துப்
பொருங்கதிர்வேலோன் மருங்ககன்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—இடங்குறித்து வற்புறுத்தல்.

17. அருமையறிதல்.

வாவியுட் கல்செலப் பாசியின் மூசிய வண்ணமென்ன
மேவிய வாயத்தைச் சேர்ந்தா ளியற்றும் வியப்பிதென்னூற்
காவியங் கந்தர் பழனியன் னாள்செய்த கண்மயக்கோ
ஓவிய விஞ்சையர் பெண்முயக் கோவென்க ணுற்றதுவே. (17)

தொடருஞ்சுற்றமு மிடனுநோக்கி யேந்திழையருமை வேந்தனறிந்தது.

மெய்ப்பாடு—மருட்கை. பயன்—தலைமகளதருமையுணர்தல்.

18. பாங்கியையறிதல்.

யாங்களிவ் வண்ண மிருப்போமென் றோவிவ ளேயெமக்குப்
பாங்கியென் றோகண் குழைவாய்ப் பயின்று பழனிச்செவ்வேள்
ஞாங்கரின் கூர்ங்கடை யாங்கவ னூர்தியை நண்ணவொத்து
நீங்கரும் பாங்கியைச் சென்றே..............நேரிழைக்கே. (18)

உடுநடுவெள்ளிபோ லோரையுட்பாங்கியை
நெடுவிழியுணர்த்த நிருபனுணர்ந்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமை நீங்குதல்.

இவை பதினெட்டுப்பாட்டும் இயற்கைப்புணர்ச்சியையும் அதுநிமித்த மாகிய கிளவியையும் நுதலின.

இயற்கைப்புணர்ச்சி முற்றும்.

உ. பாங்கற்கூட்டம்.

பாங்கற்கூட்டம் வருமாறு:—

3\. நினைதல் வினாத லுற்ற துரைத்தல்
கழறன் மறுத்தல் கவன் றுரைத்தலே
வலியழி வுரைத்தல் விதியொடு வெறுத்தல்
னொர்துகூறல் நோத னீங்கி
இயலிடங் கேட்ட லியலிடங் கூறல்
வற்பு றுத்தல் குறிவழிச் சேறல்
குறிவழிக் காண்டல் வியந் துரைத்தலம்
மெல்லிய றன்னைக் கண்டமை கூறல்
கருத்துக் கேற்பச் செவ்வி செப்பல்
அவ்விடத் தேக லீங்கிவை ந்ற்க
இடந்தலை தன்னின் மின்னிடை மெலிதல்
பொழில்கண்டு மகிழ்த லுயிரென வியத்தல்
தளர்வகன் றுரைத்தன் மொழிபெற வருந்தல்
நாணிக்கண் புதைத்தல் கண்புதைக்கு வருந்தல்
நாண்விட வருந்தல் நன்மருங் கணைதல்
இன்றியமை யாமை யாயத் துய்த்தல்
நின்று வருந்த லிகழா றைந்தும்
துன்று பாங்கன் றுறையென மொழிப.

1. பாங்கனைநினைதல்.

விண்கொண்ட வூர்தியை யாள்வோர்வை யாபுரி வேலர்முன்பு
திண்கொண்ட நாரதர் பாங்காகச் சேர்ந்தது நேர்ந்திலையே
கண்கொண்ட வென்வழி காண்பானன் றேதுன்று காமமுழந்
தெண்கொண் டயர்ந்தநெஞ் சேபாங்க னுவின்ப மெய்துவமே. (19)

தேங்கமழ்தாரோன் பாங்கனைநினைந்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமைநீங்குதல்.

2. பாங்கன்வினாதல்.

திருமாறன் செல்வ மருகோர் முருகர் சிவகிரிமேல்
வெருமாறிக் கந்துகந் தேரூர்ந்து மான்முதல் வேட்டைபுக்கோ
ஒருமாறன் போலக் கரணங்கற் றேநெஞ் சுணங்கிமென்மை
வருமாறென் னேவள்ள லேயுள்ள வாறு வகுத்துரையே. (20)

தன்கண்போல்வான்புன்கண்கண்டு யாங்குசென்றுயெனப் பாங்கன்வினயது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—தலைமகற்குற்ற துணர்தல்.

3. உற்றதுரைத்தல்.

புலிவா ரணம்பன்றி கண்டோடு முற்கையைப் பூணக்கஞ்சி
மெலிவாய் நடுங்கிய வான்கோழி சீத்து விழுங்குவபோற்
கலிவார் கடலுண்ட வேலோர் பழனியிற் கட்கடையால்
வ........முலே யாலென்னை வாட்டிற்றோர் வல்லிகண்டே. (21)

கற்றறிபாங்கனோ டுற்றதுரைத்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—பாங்கற்குரைத்தல்.

4. கழறியுரைத்தல்.

புடவியுண் டாலிற் றுயில்வோன் மருகர் பொழிற்பழனி
மடவிமென் கொங்கையைக் கூந்தலைக் கண்ணை மயங்கிவெற்பும்
அடவியும் வேலையு மாக்கிநின் சிந்தையை யாற்றல்செல்லா
முடவனு மாக்குதற் கோவள்ள னீகற்ற மூதறிவே. (22)

எழிறிகழ்பாங்கன் கழறியுரைத்தது.

மெய்ப்பாடு—நகை. பயன்—கழறுதல்.

5. கழற்றெதிர்மறுத்தல்.

நினைந்தால் வயிரக் கவடக் குவடன்ன நெஞ்சினையும்
கனிந்தாடும் வாழைக் கனிபீறு மூசியிற் காய்ந்திடுங்காண்
வனைந்தார்க் கருள்செய் முருகோர் பழனிநன் மாதுகண்கள்
முனைந்தாலன் றோசொல்வை நீயுகண்பா வென்னை மூர்க்கனென்றே. (23)

பாங்கன்கழறவுந் தாங்கலனுரைத்தது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த இளிவரல். பயன்—பாங்கனையுடம்படுவித்தல்.

6. கவன்றுரைத்தல்.

காரேழுங் கூடி யிடித்தாலுஞ் சேடன்கம் பித்திடினும்
ஊரே றெறும்பொப்பக் காணுமுன் னூற்ற லொளிர்வடிவேற்
போரே றன்னார்தென் பழனிவெற் பாகதி ரம்பொதிர்க்குங்
கூரேதி வாழைக் கொடிந்ததொத் தாய்மங்கை கொங்கைகண்டே.()

குறைநயந்துரைத்த கொற்றவன்றனக்கு
நிறைமதிப்பாங்க னின்றுகவன்றது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—கழறுதல்.

7. வலியழிவுரைத்தல்.

வென்னஞ் சமிர்தங் கனல்புன லாக்குமென் மேன்மைபஞ்சி
பின்னஞ் செயப்புட்டில் கீண்டென்ன லாய்ப்பிறை சூடுமெம்மான்
தன்னெஞ்சில் வாழ்கந்தர் வையா புரிவெற்பிற் றப்பிவந்த
வன்னெஞ்சி யார்கண்க ளாலிழந் தேனென் மதியொடுமே. (25)

குணங்களுநிறையுமென் கொள்கையும்பொறையும்
கணங்குழைநோக்காற் கலங்கினேனென்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்துதல்.

8. விதியோடுவெறுத்தல்.

கதியாரு மில்லென்று வந்தோர்க்கும் வாழ்த்துங் கவிஞருக்கும்
நிதியா யுறைந்த பழனிச்செவ் வேளிந் நிலஞ்செய்தநாள்
மதிவா ணுதலில்லை நாமில்லை பாங்கன் வகுப்பதில்லை
விதியார் புதியரன் றேவத னாற்சிந்தை வெள்கியதே. (26)

கருத்துணர்பாங்க னுரைத்ததில்வெள்கித்
திருத்தகுபுயத்தோன் றேர்ந்துகூறியது.

மெய்ப்பாடும் பயனும் அது.

9. நொந்துகூறல்

வெள்ளங் குளித்துக் கரையேறி னோர்தம்மை விட்டெண்ணியே
உள்ளங் கலங்கி யொருவனைத் தேடலி னுன்னியல்பைப்
பள்ளங் கெழுகடன் மாதடிந் தோர்பழ னிச்சிலம்பா
கள்ளங் கிளர்கண்ணி யான்மருண் டாயிதென் காதரமே. (27)

அன்னமன்னவ டன்னைச்சுட்டி
மனனநின்றன்மை மறத்திகொலென்றது.

மெய்ப்பாடு—இளிவரல், பயன்—தலைமகனைத் தெருட்டல்.

10. நோதனீங்கி யியலிடங்கேட்டல்.

நொவ்விய புண்ணிட்ட கோல்போ லிடித்து நுவன்றதல்லாற்
கவ்வைக டீர்த்துன்னை யாற்றகில் லேனினிக் கட்டுரையேல்

தெவ்வரை வாட்டிய வேல்வேள் பழனிச் சிலம்பவந்த
மவ்வலம் பூங்குழல் பண்பிடந் தானன்றி மற்றொன்றுமே. (28)

அழுங்குறுபாங்க ளுங்கவன்றன்னை
வழங்குதியவடன் மாண்பிடமென்றது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—தலைமகனையாற்றுவித்தல்.

11. இயலிடங்கூறல்.

நடையோதி மங்கொங்கை யோதிமங் கால்செங்கை நான்முகன்வீ
டிடையோ மதன்றுடை யேரோ வரம்பை யரம்பைவரிக்
கடையோதி காரொலி கண்ணே பழனிநங் கந்தர்கைவேல்
அடையோதை மாதவி நீழல்வண் சூழலென் னுருயிர்க்கே. (29)

மயலுறுமன்னன் புயலுறழ்கூந்தல்
இயலுமிடமு மிதுவெனவுரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—பாங்கற்குணர்த்துதல்.

12. வற்புறுத்தல்.

கேட்போர்க்குக் கையிட்ட செல்வியிற் றேன்றக் கிடைத்தொருவன்
கோட்போக லாச்செய்யுண் மேற்போய்ப் பொருள்கண்டு கூறுதல்போல்
வாட்போர்வெஞ் சூர்கெட வேற்போர்செய் தோர்வண் பழனிவெற்பா
சேட்போய்க்கண் டெய்துவன் கொவ்வைச்செவ் வாயவள் செவ்வியையே.

சேண்புடைபரந்த செழுமணிச்சிலம்பனை
மாண்புடைப்பாங்கன் வற்புறுத்தியது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வற்புறுத்தல்.

13. குறிவழிச்சேறல்.

சங்கரற் கோர்முறை யாசானும் பாலனுந் தம்பியுமாம்
புங்கவக் கந்தர் பழனிநங் கோன்சொன்ன பொன்பளிங்கின்
அங்கதிர்ப் பாறை கடலாய்த் திணைகொங்க தாயிதணம்
பங்கயப் பூம்பொகுட் டாய்த்தங்கு மோவந்தப் பைம்புனத்தே. (31)

கொற்றவன்சொன்ன குறிவழிச்செல்வோன்
மற்றவணிலைமை மனத்தினளந்தது.

மெய்ப்பாடு—பெருமிதஞ்சார்ந்த மருட்கை. பயன்—உசாவியுணர்தல்.

14. குறிவழிக்காண்டல்.

புதுவாண் முகமதி மான்மானைச் சாய்க்கும் புடைதுடித்து
மதுவார்சொல் சாயல் கிளிமயி லோட்டும வள்ளலுள்ளங்
கதுவாய்செய் பொற்பிது செவ்வேள் பழனிக்கண் ணூரமிர்து
மிதுவாமி தேயவர் சொற்கொம்பி லேறு மிளங்கொடியே. (32)

குறிவழிச்சென்ற வறிவுடைப்பாங்கன்
மறிமானுேக்கியை நெறிபெறக்கண்டது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தெளிதல்.

15. தலைவனை வியந்துரைத்தல்.

செம்மான் மகளைப் பிரியார் பழனியிற் சீதசலந்
தம்மாற் கசிபுதுக் கும்பமன் னுனலஞ் சாற்றுவதால்
இம்மா மயிலைக்கண் டோரடி யாரே யெடுத்துவைப்பார்
அம்மாகம் மன்னர் திடங்தவத் தோர்க்கு மளப்பரிதே. (33)

நன்னுதல்வடிவு நலனுங்கண்டு
மின்னுறுவேலனை வியந்துரைத்தது.

மெய்ப்பாடு—மருட்கையைச்சார்ந்த அச்சம். பயன்—தலைமகனை வியத்தல்.

16. கண்டமைகூறல்.

வலம்புரி கொள்கைத் திருமான் மகளிரை மன்றல்செய்து
நலம்புரி கொள்கை முருகோர்வை யாபுரி நண்பபெண்பாற்
குலம்பெறு மானென் றெருவேட னம்பிற் குழைந்துழலாய்ப்
புலம்பெறு தன்மைகண் டேன்கலை தாழ்ந்துபின் போந்திடவே. (34)

பேதையைக்கண்டமை பிணையிற்சுட்டிக்
கோதைமார்பற்குக் குறித்துரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைமகனை ஆற்றுவித்தல்.

17. சேவ்விசேப்பல்.

மழைபோழப் போயின செந்தா மரைக்கெண்டை வள்ளல்வள்ளைக்
குழைபோய்க் குறுக்கிட மீள்வன முத்தங் கொழிப்பதுநீ

ரிழைபோர்ப்ப செப்பை யிழையொன் றை மேகலையீழ்ப்பவின்சொற்
கழைபோற் பழனிச்செவ் வேளருள் போல்வளர் கற்பகத்தே. (35)

கொவ்வைவாயினள் செவ்விசெப்பியது.

மெய்ப்பாடும் பயனும் மேலது.

18. அவ்விடத்தேகல்.

அடியிட்ட வண்ணமு மீரா று தோளு மழகுங்கண்டு
வெடியிட்டகொன்றையரேந் தும்வையாபுரிவேள்பண்புபோல்
வடியிட்ட வென்மயில் கல்லாரஞ் செச்சை வணங்குநின்றுற்
பிடியிட்ட மென்னடை மின்னது வேயென் பெரு...மே. (36)

ஆங்கவணிலைமை பாங்கனுரைப்பக்
குறிப்புறுவேந் தெனறிப்படுகின்றது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—ஆற்றாமை நீங்குதல்

இவ்வாறுநிற்ப விடந்தலைதனக்குமாமாறு சொல்லுமாறு.

19. மின்னிடைமேலிதல்.

தாழைக் கனிவிழக் காக்கைநங் காற்றுச் சிறகிற்றட்டி
வீழக்கண் டோமென்று மீண்டும் பறத்தலில் வெஃகிவெஃகி
யேழைக் கருத்தழி கின்றேமைத் தேர்ந்திங்கு மெய்துங்கொல்லோ
வாழக் கழறிச்செவ் வேள்பழ னிச்சென்ற வாண்டகையே. (37)

வள்ளலைநினைந்தவ ளுள்ளமெலிந்தது.

மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த மருட்கை. பயன்—உசாவி ஆற்றுமை நீங்குதல்.

20. பொழில்கண்டுமகிழ்தல்.

கொஞ்சு கலாபப் பரியோர் பழனிக் குமரர்வெற்பிற்
பஞ்சு கமழுஞ்செஞ் சிறடி யாளின்ன பண்பினளேற்
கிஞ்சுகம் வாய்தென்றன் மென்னடை காந்தள்கை கிற்றலுற்ற
வஞ்சுக மின்சொலன் றேநெஞ்ச மேபுன மன்றிதுவே. (38)

தண்டலைகண்டோன் றையலைக்கண்டெனப்
பண்டைமகிழ்வின் பரிசேநினைந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

21. உயிரேனவியத்தல்.

ஆடிவைப் பாயொளிர் வேல்வேள் பழநி யணங்குமுன்சேர்ந்
தோடிவைப் பார்வையென் னுள்ளம் புகாமுன்ன மோரையுட்போய்த்
தேடிவைப் பார்தடு மாறிப்பின் கண்ட திரவியம்போன்
மோடிவைப் பார்விஞ்சை போற்பின்னுங் காணவென் முன்னின்றதே. (39)

பொதும்பர்ச்சோலையிற் பெதும்பையைக்கண்டது.

மெய்ப்பாடும் பயனும் மேலது.

22. தளர்வகன்றுரைத்தல்.

போதுங்கொய் யார்தம் மிடமென்று பங்தொடு பூஞ்சுனையாட்
டேதுஞ்செய் யார்தம் முலையல்கு லென்றுமற் றென்னினைந்தோ
பாதஞ்செய் யார்பச்சை மாமயி லார்பழ னிச்சிலம்பில்
நாதஞ்செய் பண்ணையை நண்ணு திவர்செய்யு நற்றவமே. (40)

ஒண்டொடிமடந்தையை யொருசார்தனிநிலை
தண்டலைக்கண்டவன் றளர்வகன்றுரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

23. மொழிபெறவருந்தல்.

அன்றைய வாமன மஞ்சன புட்பவங் தக்கண்களாற்
சென்று தெளிந்திலன் சார்வபு மான்சுப்பிர தீனமயிற்
குன்றுடை யான்பழ னிப்பிடி நீகுமு தங்குவித்தால்
இன்றயி ராவதங் கூர்புண்ட ரீகமொத் தேங்குவனே. (41)

எய்தற்கரிதெனத் தையல்சொற்கேட்பது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்துதல்.

24. நாணிக்கண்புதைத்தல்.

படைக்கல மார்புயம் பன்னிரண் டார்பழ னிச்சிலம்பி
னுடைக்கல னேர்பொழி லாண்பால்பெண் பாலென் றுனைநம்பினேன்
இடைக்கல மீனெற்ற வாமைவென் றூங்கலி லெற்கிடந்தா
அடைக்கலம் யான்புகுந் தேன்மிகுந் தேன்சிந் தலர்க்கொடியே. (42)

அற்கடிவேலன்முன் னிற்கநாணிப்
பொற்கொடியாங்கோர் பூங்கொடிமறைந்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—ஆற்றுமை நீங்குதல்.

25. கண்புதைக்குவருந்தல்.

அண்டர்கள் சேனைக் கிறையோர் பழனியி லன்பொடுகண்
கண்டது கைசெய்தல் கேட்கச்சென் றென்னநின் கண்புதைத்தாய்
எண்டக மெய்யொ டிடையேபொய் காட்டி யெடுத்தனம்
உண்டெனி லென்றுயர் தீரல்லை யேற்புதை யொண்டொடியே.(43)

நின்படைவிழியாற் றுன்பமில்லையுன்
மின்புரைமேனியே வன்பெனக்கென்றது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றுமையுணர்த்துதல்.

26. காவனுண்விடல்.

காற்றுக் கொதுங்கிக் கருப்பூரச் சூழல் கரந்துங்தெண்ணீ
ராற்றுக் கொதுங்கிக் கனேபலச் சேது வமைத்துமெய்த்தேன்
ஏற்றுக் கொடியர்கண் போல்வார் பழனியில் யான்புகுநாண்
டோற்றுக் கனலி லரக்கா யுருகித் துயர்கின்றதே. (44)

தோற்றநாணமோ டாற்றுளாகி
யொளிப்பிடந்தன்னிலும் வெளிப்படநின்றது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—ஆற்றுமை நீங்குதல்.

27. மருங்கணைதல்.

படித்தேடு வாசித்துத் தேறலுட் கொண்டென்ன பாவையிடைக்
கொடித்தேய்வெண் ணுக்கொங்கை வம்பொடு முன்பொரக் கூழைநிற்பீர்
எடுத்தேவும் வேலர் பழனியெய் தீரளி யில்லளிகாள்
அடுத்தே யொருவற் கிருவர்பல் லோர்செல்வ தாண்மையன்றே. ()

கருங்குழலீண்டுஞ் சுரும்பிணைவிலக்கிப்
பெருந்தகையவடன் மருங்கணைந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—சார்தல்.

28. இன்றியமையாமை.

வான்கட லெய்து மமிர்தமுஞ் சிந்தா மணியுமும்பர்
கோன்கட வாரண முங்கிடைத் தாலுங் கொடியிடைநின்

மீன்கடஞ் சீர்வென்ற கண்களுங் கொங்கையும் விட்டயரோன்
தேன்கடம் பார்கையில் வேலும் பழனிச் சிலம்புமென்றே. (46)

மின்றிகழிடைக்கு வெற்பனன்புகூர்ந்
தின்றியமையாமை யியம்புகின்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—நயப்புணர்த்துதல்.

29. ஆயத்துய்த்தல்.

மங்கைதன் செங்கை தரும்வேள் பழனியில் வாய்ந்ததெனக்
கிங்குட லுங்குயிர் வண்டிட்ட கிடத்தில் யானிருப்பேன்
றெங்கலங் கோதைபல் சொல்லறியேன் செல்க தோழியர்பாற்
பங்கய வாவிப்புட் கூட்டத்திற் பேட்டன்னம் பாய்ந்தென்னவே. ()

வேயுற்றதோளியை யாயத்தினுய்த்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பிரியலுறுந்தலைமகன் வற்புறுத்தல்.

30. நின்றுவருந்தல்.

பருந்தாட வேல்பணி கொண்டோர் பழனிப் பசும்புனந்தான்
மருந்தாடுஞ் செஞ்சொற் குதலைச்செவ் வாய்மட மானைப்புல்கி
விருந்தாடும் வண்டு மிருலுமொப் பாய்முன் வினை துரப்பப்
பிரிந்தா லெனைமந் திரம்பாம்பை யீர்த்தெனப் பின்பற்றுமே. (48)

இணக்கிற்கூட்டி யிரும்பதிப் பெயர்வோன்
தணத்தற்கருமை தானேநினைந்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—ஆற்றுமை நீங்குதல்.

பாங்கற்கூட்டம் முற்றும்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஹாஸ மகாகவி இயற்றிய

அபிஷேக நாடகம்.

[குறிப்பு:—ஸ்ரீராமாயண கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே இந்நாடகத்திற் கண்ட கதையாகும். இதன் இறுதியில் தசரதமகாராஜருடைய அனுமதிபெற்று இராமன் முடிசூட்டப் பெறுகிறன்.

ஹாஸமஹாகவியியற்றிய நாடகங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இதுவும் செந்தமிழ்நேயர்களுக்குப் பயன்படும்படி மொழிபெயர்ந்து வெளியிடப்பெறு கிறது. V. S. R.]

முதல் அங்கம்.

ஸ்தாபனே.

ஸூத்ரதாரன்:—(நாந்தியினிறுதியில் அரங்கிற் புகுந்து)

யொ காயிவுத்ர வேவிலகரா ஹி ஹதா
யாஜெ விராயவரதுஷணவீய ஹதா ।
உவெராஷ்ரெ தாஷணகவயகவீநு ஹதா
வாயா ஸ வொ நிஸிவரேஷு கூஷாஹி ஹதா ॥

'காதி'யின் புதல்வரான விசுவாமித்திரமுனிவருடைய வேள்விக்குத் தடைவிளைத்த அரக்கர்களை எவர் வதைத்தாரோ, போரில் விராதன், கரன், தூஷணன்: இவர்களுடைய வலிமையை எவர் தொலைத்தாரோ, கொழுப்பினால் இறுமாப்புக்கொண்டவர்களான கபந்தன், (குரங்குகளுக்கு அரசனான) வாலி: இவர்களை எவர் மாய்த்தாரோ, எவர் இரவில்திரிவோரான அரக்கர்களுக்கு வேந்தனான ராவணன்குலத்தை வேருடன் களைந்தாரோ, அவர் உங்களைக் காப்பாராக.

இவ்விதம் பெரியோர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். (சற்றுநடந்து நோக்கி)

நான் தெரிவித்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கும்போது, ஆரவாரம் கேட்கப்படுகிறதே! ஓ! பார்க்கிறேன்.

(திரைக்குள்) சுக்கிரீவ! இங்கே இங்கே.

பாரிபார்சுவகன்:—(அரங்கிற் புகுந்து) ஐய!

க்ரோதா நு வஹ்ஷஷி ஸம்ப்ரதி தா யுநி:
ப்ரவத் ஸ்தே ஸ்ரோ த்ருவிதாரணோ ஷோது।
ப்ரவணவா தாஷ் தஹீமோ நாம்
வநா ஹகா நாவிவ வெஸிமஜ ஸ்தாம்॥

சுழல்காற்றினல் எழுப்பப்பட்டு அச்சுறுத்திக்கொண்டு, வானத்தில் குமுறுகிற மேகங்களின் முழக்கம்போல், காதுகளைத் துளைப்பதாயும் பெரிதாயும் உள்ள இந்த ஒலி எங்கிருந்து எழும்பியது?

ஸூத்ர:—மாரிஷ! நீ தெரிந்துகொள்ளவில்லையா? இப்பொழுது ஸீதையைக்கவர்ந்ததால் வருத்தமுற்றவனும், இரகு குலத்துக்கு விளக்காகிறவனும், எல்லா மக்களுடைய கண்களையும் கவரக்கூடியவனும் ஆன ஸ்ரீராமனுக்கும், தாரத்தை இழந்து பரிதபிப்பவனும் குரக்கரசனும் பருத்தகழுத்தையுடையவனும் ஆன சுக்கிரீவனுக்கும், இடையில் ஒருவருக்கொருவர் உதவிசெய்வதென்றுநிகழ்ந்த வாக்குறுதிகாரணமாகப் பொன்மாலை அணிந்தவனை வாலியை வதைக்க முயற்சிநிகழ்கிறதே! பிறகு இவர்களோவெனில்,

ஐஷா நீம் ராஜ்யவிப்ரஷ்டம் ஸுக்ரீவம் ராகவோ க்ஷணாத்।
ஸ நஸ் ஸ்தாபயிதா ப்ராப்ய விப்ரம் ஹரிஹராவிவ॥

தேவேந்திரனை (த் தன் அதிகாரத்தில்) நிறுவுவதற்காகத் திருமாலும் பரமேசுவரனும் தோன்றியதுபோல், ராஜ்யமிழந்தவனை சுக்கிரீவனை மறுபடியும் நாட்டில் நிலைநிறுத்துவதற்காக இராமலக்குமணர்கள் இங்கே எழுந்தருளியிருக்கிறார்கள்.

(வெளியேறுதல்.)

ஸ்தாபனை முற்றிற்று.

[பிறகு இராமலக்ஷ்மண சுக்கிரீவர்கள், ஹநுமான்: இவர்கள் அரங்கிற்புகுதல்.]

இராமன்:—சுக்கிரீவ! இங்கே இங்கே.

மத்பாணஶக்திநிஹதப்ரவிகீர்ணதேஹம்
ஶத்ரும் தவாத்ய ஸஹஸா புவி பாதயாமி ।
ராஜ்யம் பயம் த்யஜ மயாஸி ஸஜீவவத்தி:
த்ரஷ்டா த்வயா ச ஸமரே நிஹத: ஸ வாலீ ॥

உன்பகைவனை என் அம்பினால் சின்னபின்னமாய்ச் சிதற அடிக்கப்பட்ட உடலுடன்கூடியவனாக, இன்று உடனே தரையில் வீழ்த்துகிறேன். நீ எனது அருகில் இருக்கிறாய்; அச்சத்தை விட்டுவிடு; போரில் உன் கண்கள்காணவே வாலி கொல்லப்படுவான்.

சுக்கிரீவன்:— தேவரே! உம்முடைய கருணையால் நான் தேவர்களுடைய ராஜ்யத்தையும் அடையக்கூடுமே; வானரர்களின் ராஜ்யம் எம்மாத்திரம்?

மத்வா தேவ! தவாத்ய வாலிஹ்ருதயம் பேத்தும் ந மே ஸம்ஶய:
ஸாலாந் ஸப்த மஹாவநே ந ஹிமகிரே: ஶ்ருங்கோபமாநுந்நதாந் ।
பித்வா வேகவஶாத் ப்ரவிஶ்ய தரணீம் கத்வா ச நாகாலயம்
மஜ்ஜந்வீர! பயோநிதௌ புநரயம் ஸம்ப்ராப்தவாந் ஸாயக: ॥

ஏ! அரசே! நீர் வாலியின்மார்பைப் பிளப்பீர் என்பதில் எனக்கு ஐயமே இல்லை; ஏ! திருமகள் நாயகனே! இமயமலையின் ஏழுசிகரங்கள்போன்ற ஏழுமரங்களையும் கானகத்தில் தங்களுடைய அம்பு துளைத்து வேகத்தால் தரையிற்புகுந்து, பாதாளம்சென்று, சாகரத்தில் மூழ்கி, மறுபடியும் உம்மிடம்வந்து சேர்ந்ததே! ஏ! வீரரே! அதை நான் காணவில்லையா?

ஹநுமான்:—ஏ! அரசே! உம்முடைய திருவாக்கில் எழுந்த வார்த்தைகளால் நாங்கள் அச்சத்தை விட்டோம்; சோகத்தைத் துறந்தோம்; ஏ! ரகுகுல திலகரே! வானர அரசனுக்கு வெற்றி அளிப்பதற்காக நீருண்டமேகம்போல் விளங்குகிற நீர் இந்தமலைக்கு எழுந்தருளவேண்டும்.

இலக்குமணன்:—இவர்கள் மிகவும் விருப்பத்தை வெளியிடுவதால், அடுத்த கானகத்தின் அருகில் கிஷ்கிந்தை இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

சுக்கிரீவன்:—இளவீரரே! நன்கு உரைத்தீர்.

ஸம்ப்ராப்தா ஹரிவரபாஹுபாலிதா
கிஷ்கிந்தா தவ ந்ருப பாஹுஸம்ப்ரதிஷ்டை: ।
திஷ்ட த்வம் ந்ருபவர! கரோம்யஹம் விஸம்ஜ்ஞம்
நாதேந ப்ரசலிதசைலம் ந்ருலோகம் ॥

ஏ! அரசே! வானரவரசனுடைய கைகளாற் காக்கப்பட்ட கிஷ்கிந்தையானது, உம்முடைய திருக்கைகளால் ரக்ஷிக்கப்பெற்றவர்களான எங்களால் அடையப்பெற்றது; ஏ! மனிதர்களுக்குள் உயர்ந்தோரே! நீர் சற்று நிற்பீராக; என்னுடைய சத்தத்தினல் மலைகளுடன் மனித உலகத்தையே நடுங்கும்படிசெய்கிறேன்.

இராமன்:—இருக்கட்டும், செல்லுவாயாக.

சுக்கிரீவன்:—தேவரீர் உத்திரவுப்படி. (சற்றுத்தூரம் சென்று)

அபராதமநபேக்ஷ்ய ப்ரபோ த்வத்க்ஷிப்தோऽபி ஹா ।
பாதௌ த்வதீயௌ ஸமரே ஸ்ப்ரஷ்டும் ஸுக்ரீவ: காங்க்ஷதி ॥

ஏ! பிரபுவே! குற்றத்தைக்கருதாமலே உம்மால் தள்ளிவிடப்பட்ட சுக்கிரீவன் (இப்போது) போரில் உம்முடைய பாதங்களை வழிபட விரும்புகிறான்.

(திரைக்குள்) சுக்கிரீவனா? எப்படி? எப்படி?

வாலி:—(பின்புறந்தொங்கும் ஆடையைப் பிடித்துக்கொண்டுவருகிற தாரையுடன் அரங்கிற் புகுந்து) என்ன? என்ன? சுக்கிரீவனா?

தாரே! விமுஞ்ச முஞ்ச வஸ்த்ரம் நிருத்தாம் ஹி ।
ப்ராஸ் ஸ்வத்ருதபயேந! கிமேஷ ப்ரவ்ருத்தா ।
ஸாக்ஷீ பவத்யஸரே விநிவர்த்யமாநம்
தம் பஸ்ய சோணிதஜலப்லவதஸ்த்ரமாத்ரம் ॥

சிறந்த உறுப்புக்களையுடைய தாரையே! என்னுடைய ஆடையை விட்டுவிடு; அழகழிந்த முகத்துடனும் கண்களுடனும் கூடியவளாய் என்னசெயலைச் செய்ய முன்வந்தாய்? இரத்தத்தால் பூசப்பட்ட உடலுடன்கூடியவனாய் இந்தச் சுக்கிரீவன் போரில் வீழ்த்தப்படுவதை நீ காண்பாயாக.

தாரை:—மகாராஜரே! கிருபைசெய்யவேண்டும்; சுக்கிரீவர் எளியகாரணத்தைக்கொண்டு இங்கே வரமாட்டார்; ஆதலால் அமைச்சர்களுடன் ஆலோசனைசெய்துபோகலாம்.

வாலி:—ஆ!

ஶக்ரோ வா பவது ப்ரபுஃ ஶஶாங்கவக்த்ரே!
ஶஸ்த்ராக்ரே நிஶிதபரஶ்வதஃ ஶிவோ வா ।
நாலம் ரிபுஹிதவேஷத்யஸம்ப்ரஹர்தும்
விஷ்ணுர்வா விகஸிதவாரிஜாக்ஷநேத்ரஃ ॥

மதியொத்த முகத்தையுடைய தாரையே! என் பகைவனுக்கு இந்திரனே துணைசெய்யட்டும்; அல்லது கூர்மையான மழுப்படையையுடைய பரமசிவனே உதவிபுரியட்டும்; அல்லது மலர்ந்த செந்தாமரைக்கண்ணனான திருமாலே சகாயஞ் செய்யட்டும்; என் எதிரில்வந்து தாக்குவதற்கு ஒருவருக்கும் வலிமையில்லையே.

தாரை:—மகாராஜரே! தயவுசெய்யவேண்டும், இந்தப்பேதையான என்பால் மகாராஜர் அருள்புரியவேண்டும்.

வாலி:—என்னுடைய பேராற்றலைக் கேட்பாயாக.

தாரே! புரா ஹ்யம்ருதார்த்தம் மத்யமானேர்ணவே
த்ருஷ்ட்வா ப்ரஹஸ்ய ஸுராஸுரதைத்யஸங்காந் ।
உத்வ்ருத்தநேத்ரமதிமந்த்ரதராக்ருதிர்வா
ஆக்ருஷ்யமாண உரகேந்த்ர ஸுவிஸ்மிதாஸ்தே ॥

ஏ! தாரையே! முன்காலத்தில் அமிருதத்தையடையவிரும்பிப் பாற்கடலைக் கடையும்போது, தேவர் தானவர் அசுரர்களின் கூட்டத்தைக் கண்டு புன்சிரிப்புக்கொண்ட என்னால் திறந்தகண்களும் பெரிய உருவமும் உடைய உரகராஜன் (வாஸுகி) இழுக்கப்படுவதைக் கண்டு அவர்கள் மிகவும் வியப்படைந்தார்களன்றோ!

தாரை:—மகாராஜர் கிருபைசெய்யவேண்டும்.

வாலி:—என்வசத்தில் இருப்பாயாக. (என்சொற்படி நடப்பாயாக.) உள்ளே போவாயாக.

தாரை:—துர்ப்பாக்கியமுள்ள நான் இதோபோகிறேன். (செல்லுதல்)

வாலி:—ஓ! தாரை சென்றுவிட்டாள். நான் இப்போது சுக்கிரீவனைக் கழுத்துமுறிந்தவனாகச்செய்கிறேன்.

ஜந்த்ராவா ஶரணம் தேத்ய ப்ரபுர்வா மதுஸூதந꞉।
த்ருஷ்டஶ்ச மயா ஸாத்ய ஸஜீவோ நைவ யாஸ்யஸி ॥

உனக்கு இந்திரனே சரணமாயிருக்கட்டும்; அல்லது பிரபுவான மதுசூதனரே உதவிசெய்யட்டும்; என்கண்ணெதிர்ப்பட்டும் நீ உயிருடன் திரும்பிப் போகமாட்டாய். இங்கே, இங்கே.

சுக்கிரீவன்:—மகாராஜர் உத்திரவுப்படி.

(இருவரும் கைச்சண்டை செய்தல்.)

இராமன்:—இந்த வாலி,

ஸந்தஷ்டோஷ்டஶ்ச ரக்தநேத்ர
த்ருஷ்டிம் க்ருத்வா முஷ்டிமுத்யதம்ஷ்ட꞉।
முஞ்சந் நாதம் வாநரோ ஹாதி யத்வ
ஸம்வர்த்தாக்நி꞉ ஸம்ஹரந் லோகமேவ ॥

உதட்டைக் கடித்துக்கொண்டும் கண்கள் மிகச்சிவந்தும் கைத்தலங்களை மடக்கிக்கொண்டும் கடைப்பற்களை வெளியிற்காட்டிக்கொண்டும் அஞ்சுமாறு ஆரவாரித்துக்கொண்டும், (உலகத்தையே) எரிக்க எழுந்த பிரளயகாலாக்னியைப்போல விளங்குகிறானே!

இலக்குமணன்:—பெரியோய்! சுக்கிரீவனை நோக்குக.

விகஸிதஶததபத்ராக்ஷநேத்ர꞉
கநகமயாம் மதநீயவீநவாஹா꞉।
ஹரிவரமபயாதி வாநராத்வ
த்ருமமஹிஷ்ய ஸ தாம் விஹாய வ்ருத்த꞉ ॥

மலர்ந்த செந்தாமரைபோன்ற சிவந்த கண்களுடனும், பொன்னாலாகிய தோள்வளைகளை அணிந்த பருத்த கைகளுடனும், வானரத்தன்மையினால் தமையனைப் பெரியோனென மதியாமலும் நல்லோர்களின் ஒழுக்கத்தை விட்டும் அவன் நெருங்குகிறான்.

(வாலியால் அடிபட்டுச் சுக்கிரீவன் வீழ்தல்.)

ஹநுமான்:—ஆ! சீ! (பரபரப்புடன் இராமனிடம் வந்து) தேவரீர் வெற்றிபெறவேண்டும்.

இவன் நிலைமை யிது.

பலவாநு வாநரேந்த்ரஸ்து துர்பலஶ்ச பதிஷ்டிதே ।
அவஸ்தா ஸமயஶ்சைவ ஸர்வமேதத் விசிந்த்யதாம் ॥

வானரவரசனான வாலி பேராற்றலுடையவன்; என்னுடைய தலைவனோ வலியற்றவன்; (பின்னவனுடைய) நிலைமையும் (உம்முடைய) வாக்குறுதியும் உம்மால் இப்பொழுது நினைக்கத் தக்கவை.

இராமன்:—பரபரப்படையவேண்டாம். இதோ செய்கிறேன்; (அம்பினை எய்து) ஓ! வாலி கீழே விழுந்தான்!

இலக்குமணன்:—இந்த வாலி,

ருதிரக்ஷிதகாத்ர: ஸ்ரஸ்தஸம்ரக்தநேத்ர:
கடிநவிபுலபாஹு: கார்முகோத்கம்பவிக்ஷ: ।
சலிதகதி கயம் வித்ராகஷ்டே க்ஷேத்ரேண:
ஶரவரபரிவீதம் ஶாகவேகம் ஶரீரம் ॥

இரத்தத்தால் பூசப்பட்ட உடலுடனும், கலங்கிச் சிவந்த கண்களுடனும், கடினமானவைகளும் பருத்தவைகளுமான தோள்களுடனும், கணையாலடிபட்டு வேகம் குன்றியதான சரீரத்தை வருந்தி இழுத்துக்கொண்டு மறலியினுலகத்துக்குச் செல்லுகிறவனாய்த் தரையில் வீழ்கிறான்.

வாலி:—(மோகமடைந்து, மறுபடி தெளிந்து, கணையில் பொறித்த பெயரெழுத்துக்களைப் படித்து இராமனைநோக்கி)

யத்த்வம் ஹி நாவதீயஸேऽஸோத்யுதேந
யத்தெ ஶரம் ஸமாயிதம் ஶக்ரஸ்ணாஸ ।
வீரேண வ்யபமத்யஸேऽஸம்ஶயேந
லோகாநாம் ஸமுபேந்த்ரேதேந ॥

ஓ! இராம! அரசருடையதர்மத்தைக் கைக்கொண்டு தர்மங்களில் ஐயமற்று, வீரனுய் உலகத்தாருடைய கபடத்தை ஒழிக்கவந்தவன் என்னைப் போரில் நெறிதவறிவஞ்சித்தல் முறையோ. ஓ! சீ!

ஸ த்வா ஸம்ஶ்ருதேன யஶஸா ஸாஜந்தேந ।
ஸமேந ஶரம் ப்ராப்தா ப்ராப்தயஶஃ க்ருதம் ॥

அழகுவாய்ந்த உருவத்துடன், புகழுக்கிருப்பிடமாயிருக்கிற நீர் என்னைக் கபடமாக அடித்து மிகவும் இகழ்ச்சியை அடைந்தீரே!

ஓ! ராகவ! மாவுரிதரித்தவனும் மாறுவேடம்பூண்டு மனக் கலக்கமடைந்தவனுமான தம்பியுடன் நான் சண்டைசெய்யும் போது என்னை மறைந்துகொல்லுதல் அதர்மமே.

இராமன்:—மறைந்து வதைத்தல் அதர்மமென்பது எப்படி?

வாலி:—அதில் ஐயமேன்?

இராமன்:—அது அப்படியன்று; பார்ப்பாயாக.

வாகுராபிஶ்ச ப்ரச்சன்னாஶ்ச த்ருஷ்டேத வா யः ।
வ்யப்ருத்தாஶ்ச ப்ரமத்தாஶ்ச ஸவாநு ஸமேஜ நஞ்ஜிதः ॥

வலைகளைவீசி மறைந்து மிருகங்களைக் கொல்லுதல்கூடும்; கொல்லத்தகுந்தவனுதலாலும், மிருகமாயிருப்பதாலும், நீ மறைந்து தண்டிக்கப்பட்டாய்.

வாலி:—நீர் என்னைத் தண்டிக்கப்படத்தக்கவன் என்று கருதுகிறீரா?

இராமன்:—என்ன சந்தேகம்?

வாலி:—யாது காரணங்கொண்டு?

இராமன்:—சேரத்தகாதவளைச் சேர்ந்ததனால்.

வாலி:—இது எங்களுடைய தர்மமே.

இராமன்:—ஓ! அது சரியா?

𑌭𑌵𑌤𑌾 𑌵𑌾𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾 ।

𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌗𑌲𑍍𑌭𑌸𑍍𑌯 𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑌰𑍍𑌶𑌨𑌂 ॥

வானரர்களுக்கு அரசனும் தர்மாதர்மங்களை அறிந்தவனுயுமிருக்கிற நீ மிருகசரீரமுடையனுயிருக்கும் காரணத்தால் உடன்பிறந்தான்மனையாளைக்கூடுவது நியாயமாகுமோ?

வாலி:—உடன்பிறந்தான்மனையாளைக்கூடுவது என்ற குற்றம் இருவரிடமும் இருக்கும்போது, நான் மட்டும் தண்டிக்கப்பட்டேனே; சுக்கிரீவனுக்குத் தண்டனை இல்லையே?

இராமன்:—தண்டனை அடையவேண்டியவனுதலால் நீ தண்டிக்கப்பட்டாய்; தண்டிக்கத் தகாதவனைத் தண்டித்தல் கூடாது.

வாலி.—

𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑍇𑌣𑌾𑌭𑌿𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑌾 𑌮𑌮 𑌪𑌤𑍍𑌨𑍀 𑌗𑌰𑍀𑌯𑌸𑌃 ।

𑌤𑌸𑍍𑌯 𑌦𑌾𑌰𑌾𑌭𑌿𑌮𑌰𑍍𑌶𑍇𑌨 𑌕𑌥𑌂 𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌰𑌾𑌘𑌵 ॥

ஓ! ராகவ! பெரியோனுன என்னுடைய தர்மபத்தினி சுக்கிரீவனுல் கூடப்பட்டாளே? அவனுடைய தாரத்தைக் கூடியதால் நான்மட்டும் எவ்வாறு தண்டிக்கப்படத்தகுந்தவனுக ஆவேன்?

இராமன்:—பெரியோன் சிறியவனுடைய தாரத்தைத் தீண்டுதல் ஒருபோதும் நியாயமாகாது.

வாலி:—ஓ! நாம் பதில் உரைக்கமுடியாது; உம்மால் தண்டிக்கப்பட்டதால் நான் பாவமற்றவனுக ஆகிவிட்டேனன்றோ?

இராமன்:—அவ்விதமே ஆகட்டும்.

சுக்கிரீவன்:—ஆ! ஆ!

4

கரிகரஸத்ருசா கஜேந்த்ரகாமிந்
புவி விஶஸ்த்ரவரிக்ஷதாங்கதௌ ச |
அவநிதலகதௌ ஸமீக்ஷ்ய பாஹூ
ஹரிவர ! ஹா வ்யததீவ சேதஶ்ச விதீர்ய ॥

பெரிய யானையின் நடையை யொத்த நடையையுடையவரே! வானர அரசரே! யானைத்துதிக்கைகள்போன்ற தங்கள் கைகள் பகைவருடைய அம்பினால் சிதற அடிக்கப்பட்ட தோள்களுடன் பூதலத்தில் விழுந்துகிடக்கின்றனவே; அவைகளைக் கண்டு என் சித்தமே வீழ்வதுபோலும்.

வாலி:—சுக்கிரீவ! வருந்தியது போதும்; இதுவே உலகியல்.

(திரைக்குள்) ஹா! ஹா! மகாராஜரே!

வாலி:—சுக்கிரீவ! மகளிர்குழுவைத் தடுப்பாயாக. இந்த நிலைமையிலிருக்கிற என்னை அவர்கள் பார்க்கக்கூடாது.

சுக்கிரீவன்:—மகாராஜருடைய கட்டளைப்படி. ஹநுமானே! அவ்வாறு செய்வாயாக. (வெளியே செல்லுதல்.)

(பிறகு ஹநுமானும் அங்கதனும் அரங்கிற்புகுதல்.)

அங்கதன்:—

ஶ்ருத்வா காலவஶம் யாதம் ஹரிருக்ஷகணேஶ்வரம் |
ஶோகோபசிதஸந்தாப: ப்ரயாதி ஶிதிலக்ரம: ॥

வானரர்கூட்டத்துக்குத்தலைவரான அவர் காலன்வசமானதைக் கேள்வியுற்ற வருத்தத்தினால் என்னால் நடக்கமுடியவில்லை. ஹநுமானே! மகாராஜர் எங்கே?

ஹநுமான்.—இதோ மஹாராஜர்.

ஶரநிர்பிந்நஹ்ருதயோ விபாதி தரணீதலே |
குஹஶக்திவிநிர்பிந்நோ யதா க்ரௌஞ்சமஹீதர: ॥

முருகக்கடவுளுடைய வேலாயுதத்தால் அடிபட்ட 'கிரவுஞ்ச' மலையைப்போல் பாணத்தால் பிளக்கப்பட்ட மார்புடன் பூதலத்தில் விளங்குகிறாரே!

அங்கதன்:—(நெருங்கிவந்து) ஹா! மகாராஜரே!

ஸுசிரஶயநஶாயீ பார்த்திவேந்த்ரோசிதஸ்த்வம்
க்ஷிதிதலபரிவர்த்தீ க்ஷீணஸர்வாங்கசேஷ்ட: ।
ஶரவரபரிவீதம் வ்ருத்தது:ஸ்த்யஜ்ய தேஹம்
கிமிஹ விஶஸி வீரஸ்வர்க்கமத்யாபி கந்தும் ॥

வாநர அரசராகிய நீர் மிருதுவான படுக்கையில் படுப்பவராக இருந்தீர்; (இப்பொழுதோ) அங்கசேஷ்டை ஒடுங்கித் தரையில் புரளுகிறீரே! வீரரே! சிறந்த அம்பினால் துளைக்கப்பட்டதான தேகத்தைவிட்டு இன்று வீரசுவர்க்கம்செல்லநினைக்கிறீரோ? (என்று பூமியில் விழுந்துவிடுதல்.)

வாலி:—அங்கத! வருந்தவேண்டா. ஓ! சுக்கிரீவ!

யோக்ருதம் தோஷவேகாஸ்ய பால்யா
த்வயா ஹரீணாமதிபேந ஸஹ்ய: ।
விமுச்ய ரோஷம் பரிபால்ய தர்மம்
குலப்ரவாளம் பரிக்ருஹ்யதாம் ந: ॥

வானரராசனுன நீ நான் இழைத்த தீங்குகளை நினையாமல் சினத்தை அறவே விட்டுத் தர்மத்தைக் கைக்கொண்டு நம் குலக் கொழுந்தாகிய அங்கதனைப் பெற்றுக்கொள்வாயாக.

சுக்கிரீவன்:—மகாராஜருடைய ஆணைப்படி.

வாலி:—ஓ! ராகவ! ஏதாவது குற்றஞ்செய்திருந்தாலும் குரங்கின் சபலத்தைப் பொறுத்தருளவேண்டும்.

இராமன்:—நல்லது.

வாலி:—(சுக்கிரீவ!) நம்முடைய குலதனமாகிற பொன்மாலையைப் பெற்றுக்கொள்வாயாக.

சுக்கிரீவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். (வாங்கிக்கொள்ளுதல்.)

வாலி:—ஹநுமானே! தீர்த்தம் கொணர்வாயாக.

ஹநுமான்:—மகாராஜருடைய கட்டளைப்படி. (வெளியேசென்று மறுபடி அரங்கிற் புகுந்து) இதோ தீர்த்தம்.

வாலி:—(ஆசமனம் செய்து) உயிர் என்னைவிட்டுப் போகின்றது போலும்; இதோ கங்கைமுதலான மகாநதிகளும் ஊர்வசிமுதலான அப்ஸரஸ்ஸுகளும் என்னிடம் வருகிறார்கள்; ஆயிரம் அன்னப் பறவைகளால் தாங்கப்பட்டதும் வீரர்களை அழைத்துச்செல்வது மான விமானம் காலனால் அனுப்பப்பட்டு என்னை அழைத்துப் போக வந்திருக்கிறது; நல்லது, இதோ வந்துவிட்டேன்.

(சுவர்க்கம் செல்லுதல்.)

எல்லோரும்:—ஆ! ஆ! மகாராஜ!

இராமன்:—வாலி தேவலோகம்சென்றான். சுக்கிரீவ! அவனுடைய ஈமச்சடங்குகளைச் செய்வாயாக.

சுக்கிரீவன்:—தேவரீர்! ஆணைப்படி.

இராமன்:–இலக்குமண! சுக்கிரீவனுக்கு அபிஷேகம் செய்வாயாக.

இலக்குமணன்:—பெரியோருடைய உத்திரவின்படி.

(எல்லோரும் வெளியே செல்லுதல்.)

முதல் அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.
மதுரை.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௨௨௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றும் பினீசிய யுத்தம்.

காதாக்கோப்பட்டினம் களைதீர்ந்து செல்வமுற்று வலிமை பெற்றுத் தழைத்தோங்குதலை எதிர்பார்த்த உரோமர் பட்டினத்தின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் இடையிடையே தமக்கு அறிவிக்குமாறு மசிநிசாவுக்குக் கட்டளையிட்டு நுமிடியா நாட்டை அவனுக்கு அளித்தனர். மசினிசா உரோமருடைய ஆதரவோடு பினீசியரை வருத்தத்தொடங்கினன். ஹனிபாலின் செங்கோன்மையால் காதாக்கோப்பட்டினம் உறுகண் தீர்ந்தது. கி. மு. 195-ல் பினீசியர் உரோமருக்கு இறுக்கவேண்டிய திறைமுழுவதையும் அளிக்கத்துணிந்தனர். இஃதுணர்ந்த கேற்றோ காதாக்கோப்பட்டினத்தை அழிக்கவேண்டுமெனச் சொற்பொழிவுகள் செய்தனன். மசிநிசாவின் செருக்கை அடக்குதற்குக் காதாக்கினியர் எத்தனித்தனராக, உரோமர் இடையிட்டு வெருட்டத் தம் வலியையும் மாற்றார்வலியையும் உணர்ந்த காதாக்கினியர் சமாதானம் இரந்தனர். உரோமர் காதாக்கினியரின் நிலப்படை கப்பற்படைகளைக் குலைக்கவேண்டுமெனக் கட்டளையிடக் காதாக்கினியர் அதற்கு உடன்படவில்லை. உரோமர் உடனே பொருதற்கு எத்தனித்தனர். கி. மு. 148-ல் உரோமருடைய தலைவன் பிசோ என்பான் ஆபிரிக்காவில் இறங்கினன். அவன் ஒரு வெற்றியும் பெறவில்லையாதலாற் கிரேக்கநாட்டை வென்ற அமீலியஸ் போலனுடைய மகன் பகோணிலியஸ் ஸ்கிப்பியோ என்பானை இணைத்தலைவரில் ஒருவனாகத் தெரிந்தெடுத்துக் காதாக்கோப்பட்டினத்தை நூறும்படி மேன்மக்கட்சபை ஏவிற்று. ஸ்கிப்பியோ காதாக்கோநகரைச் சூழ்ந்துநின்று மகாலியா என்னும் புறநகரைக் கைப்பற்றி உண்ணகரைத் தாக்கினன். கி. மு. 146-ல் அவன் மதிலேறி நகராண்களைக் கைப்பற்றினன். நகரத்தோர் வீதிகடோறும்

போர்புரிந்து இறந்தனர். காதாக்கினியர் தம்முடைய இல்லங்களை யும் கோட்டங்களையும் தாய்நாட்டையும் காத்தற்காகப் போர் செய்து மாண்டனர். ஸ்கிப்பியோ, கோயில்கள் வீடுகள் மதில்கள் யாவற்றையும் இடித்துத் தூளாக்கித் தீயிட்டு இந்நிலம் பாழாகக் கடவதெனச் சபித்தான். இப்போரில் பினீசிய நகரான உற்றிக்கா உரோமருக்குத் துணைபுரிந்து சுபாதீனம்பெற்றது. இவ்வளவில் உரோமர் ஆபிரிக்காமுழுவதிலும் தம்மாணையைச் செலுத்தினர்.

ஆதிகாலத்து இலத்தீன் நூல் வரலாறு.

கிரேக்கக் குடியேற்றநாடுகள் உரோமரது ஆட்சிக்குட்படுமுன் கிரேக்கமொழி இலத்தீன்மொழியோடு கலக்கவில்லை. கி.மு.207 ஆம் ஆண்டுக்குமுன் இலத்தீன்மொழி இலத்தீன் நாட்டிலும் உரோமா புரத்திலும் பேசப்பட்டது. அக்காலத்தில் இலத்தீன்மொழியில் இலக்கண இலக்கியங்கள் இயற்றப்படவில்லை. சில சிறு கீர்த்தனங்க ளும் வரிப்பாடல்களும் பாடப்பட்டு ஏட்டுவழக்காகாமல் அழிந் தனவெனப் புலவன் என்னியஸ் கேற்றோ என்பான் கவலையுற்றான். பேவியஸ் பிக்கர் என்பவர் தம் காலத்திலும் அப்பாட்டுக்கள் நாட் டுப்பக்கங்களில் பாடப்பட்டனவெனக் கூறினர். பிற்காலத்தில் பெரும்புலவர்களான சிசரோ வேசிலியஸ் ஹொறேசியஸ் முதலியோ ரும் மேற்கூறிய கருத்துடையவர்களாக இருந்தனரெனத் தெரி கிறது. அப்பாட்டுக்களில் துவல்பொருள் வீரரும் வீரச்செயல்களு மாதலான் அவை புறப்பாட்டுக்களே. உரோமியூலுஸ் உரோமா புரத்தை நிறுவிய கதைகள் பாடப்பட்டன. இக்காலத்துக்கிடைக் கும் இலத்தீன் நூல்கள் யாவும் கி.மு. 270-க்குப் பின் எழுதப்பட்ட வையே. பெரும்பாலும் இலத்தீன்புலவர்கள் கிரேக்கநூல்களை அடி யொற்றியே இலத்தீன் நூல்களை இயற்றினர். சிறுவர்க்குக் கல்விகற் பிக்கும்பொருட்டும் மக்களை இன்புறுவிக்கும்பொருட்டும் சிற்சில சிறு நூல்களை இயற்றினார்கள். பண்டைக்காலத்திற் கல்விக்குப் பெருமையில்லாமையால் இத்தாலியாவிலும் புலவர்களை ஒருவரும் ஆதரிக்கவில்லை. தலைவர்களும் வள்ளல்களும் தம்மைப் புகழ்தற் பொருட்டுக் கவிஞரைப் புரந்தனர். ஸ்கிப்பியோக் குடியினர் என்னி யஸ் என்னும் புலவனை ஆதரித்தனர் என அறிகிறோம். ஆதிகாலத் துப் புலவர்சிலரைப் பற்றியும் அவர் இயற்றிய நூல்களைப்பற்றி யும் சிறிது ஆராய்வோம்.

புலவன் அன்ரோனிக்கஸ்.

இலிவியஸ் சலினேற்றர் என்னும் புரவலன் அன்ரோனிக்கஸ் என்னும் பன்னீராட்டைப் பிராயத்து அடிமைச்சிறுவனை இராறந்த நகரில் பெற்று உரோமாபுரத்துக்குக் கொண்டுவந்தனன் அன்ரோனிக்கஸ் சிறுவர்க்குக் கல்விகற்பிக்கும் உவாத்தியானான். இலத்தின்மொழியில் நூல்கள் இல்லாமையால் அவன் கிரேக்கர் காப்பியமாகிய ஓடிசியை மொழிபெயர்த்துக் கற்பித்தான். அவனது மொழிபெயர்ப்புநூல் பல குற்றமுடையது; சொற்சுவை பொருட்சுவை இசைநலம் நகைச்சுவை முதலியன இல்லாதது. அவனது மொழிபெயர்ப்பாகிய ஓடிசியை ஹொறேசியஸ் என்னும் புலவன் தான் சிறுவயதிற் கற்று வருந்தியதாக மொழிந்தனன். அன்ரோனிக்கஸ் ஆபிரிக்கனென ஐயுறுதற்கிடனுமுண்டு. கி. மு. 240-ல் அன்ரோனிக்கஸ் அவலச்சுவை விரவிய பல நாடகங்களை இயற்றினன். கி. மு. 207-ஆம் ஆண்டு அவனை ஹஸ்துருபாலின் தோல்வியைப் பாடும்படி அரசாங்கத்தார் வேண்டினர்.

நீயஸ் நாவியஸ் கி. மு. 269—197.

நீயஸ் நாவியஸ் என்பான் அன்ரோனிக்கஸ் என்னும் புலவன் காலத்தவன்; கம்பேனியநாட்டவன்; முதற் பினீசியயுத்தத்தில் உரோமர்படையிற் சேவித்தவன். இவன் கி. மு. 255-ல் பல நாடகங்கள் இயற்றினனென்று தெரிகிறது. நாடகங்கள் கிரேக்கமொழிபெயர்ப்புக்களாயினும் நகைச்சுவை செறிந்தவையென்றும் சொன்னயம் உடையவையென்றும் தெரிகிறது. நாவியஸ் ஸ்கிப்பியோவை வஞ்சப்புகழ்ச்சிசெய்து நிந்தித்தமையால் உரோமாபுரத்தினின்றும் அகற்றப்பட்டான். இவன் வனவாசத்தை உற்றிக்காநாட்டிற் கழித்து ஒரு காப்பியத்தை இயற்றினன். அக்காப்பியமே இலத்தீன்மொழியில் முதன்முதல் எழுதப்பட்ட காப்பியமாகும். அக்காப்பியம் முதற்பினீசியப்போரை வருணிக்கின்றது. அது, இக்காலத்திற் கிடைத்திலது. வேசிலியஸ் என்னும் புலவன் ஏனிட்காப்பியத்தில் அக்காப்பியத்திலிருந்து சில காட்சிகளை எடுத்தோதினனென ஆராய்ச்சிவல்லோர் செப்புகின்றனர். டைடோக்குலேவியது காதை அந்த நூலிலிருந்து எடுக்கப்பட்ட

தெனச் சொல்லுகிறுர்கள். நாவியஸ் கிரேக்கமொழிக் கலப்பைத் தடுக்கமுயன்றனனென்று அவனது ஞாபகச்சின்னமாக வரைந்த கல்வெட்டொன்ருல் தெரிகிறது.

இலத்தீன் நாடகங்கள்.

விழாக்காலங்களில் இத்தாலியதேசத்தார் கூடிக் களித்தனர். அக்காலங்களில் நகைச்சுவை விரவிய நாடகங்கள் நடிக்கப்பட்டன. எற்றுரியநாட்டு நாடகங்கள் காமச்சுவைமிகுந்தவையெனவும் கம்பேனியநாட்டு நாடகம் கலைச்சுவைமிகுந்துவிளங்கியவையெனவும் இத்தாலியாதேசத்தில் இவ்விருவகைக் கூத்துக்களும் நடிக்கப்பட்டனவெனவும் அறியக்கிடக்கிறது. இத்தாலியரால் நகைச்சுவை பெரிதும் போற்றப்பட்டதாகையால் ஏனையசுவைகள் விரவிய நாடகங்கள் விருத்தியடையவில்லை. இலத்தீன் நாடகங்களும் சொன்னயம் பொருணயம் இல்லாதவையாகும்; படிப்பினைகளையு[ம்] ஒழுக்கமேன்மைகளையும் புகட்டாமல் நகைச்சுவையின்பாற்படும் விகடச்சுவை ஒன்றையே அவை போற்றின. கி. மு. 363-ல் அரசாங்கத்தினர் ஒருநாடகவரங்கை நிறுவினர். அன்ரேனிக்கஸ் நாவியஸ் முதலியோர் நாடகங்களை அந்த நிருத்தசாலையில் நடிப்பித்துக் காட்டினர். என்னியஸ் என்னும் புலவன் பழங்கதைகளை நாடகமுறைபாக எழுதினன். வேத்தியலைக் கூறும் நாடகங்களை உரோமர் பொருட்படுத்தவில்லை; கதைதழுவிவரும்கூத்திலும்பார்க்க விஞ்சைக்கூத்து, கயிற்ருட்டம், விலங்குவேட்டை, மற்போர், வாட்போர் முதலியவற்றை மிகவும் விழைந்தனர். உரோமர் முற்காலத்தில் இலக்கண இலக்கியப் பயிற்சியில்லாதவர்களாகையால் வீண்விளையாட்டிற் பொழுதுபோக்கினர்கள்.

கி. மு. 254—184 மக்கியஸ் புளோற்றஸ் என்பான் மாவிற்குந்தொழிலால் தன் வாழ்க்கைக்குவேண்டும்பொருளை ஈட்டினன். ஒழிவு நேரங்களில் பல நாடகங்களை இயற்றினன். அந்நாடகங்களுள் இருபது நாடகங்கள் கிடைக்கின்றன. அவை கிரேக்கமொழிபெயர்ப்பென ஆக்கியோன் எழுதிவைத்தனன். அந்நாடகங்கள் விகடச்சுவைசெறிந்தவையாகையால், கள்வர் வீண்செலவுக்காரர் ஏமாற்றுங் காதலர் மனைவியின்கற்பைச்சமுசயிக்கும்

கணவர் கயவர் முதலியோரே அவற்றில் பாத்திரங்களாயினர். இல்வாழ்க்கைக் கதைகளே நடிக்கப்பட்டன. அந்நாடகங்கள் அறிவை வளர்க்கவில்லை. அன்றியும், அந்நாடகங்கள் உண்டுடுத்துப் புணர்ந்து களித்தலே இல்வாழ்க்கையின் இம்மைநோக்கமென வற்புறுத்தின. நாடகங்களில் கிரேக்கமொழிகள் பல ஏறின. இலத்தீன் நாடகங்கள் கிரேக்கநாடகங்களளவு சிறப்புடையன வல்லவென்று கூறலாம்.

இலத்தீன் உரைநூல்கள்.

நாகரிகமடையாத நாடுகளில் உரைநூல் அருமையாகவே இயற்றப்படும். பண்டைக்காலம் செய்யுள்வளர்தற்கேற்றகாலமாதலின் உரைநூல்கள் பெருகவில்லை. பண்டைக்காலத்தோர் தோற்புத்தகங்களிலும் ஏடுகளிலும் எழுதினராகையால் உரைநூல்களை எழுதவில்லை. பேவியஸ் பிக்ற்றர், சின்சியஸ் அலிமென்றஸ் என்னும் இருவர் உரோமாபுரத்தின் வரலாற்றைக் கிரேக்கமொழியில் எழுதினர்கள். அவர் நூல்கள் வரலாற்றுமுறையாக உரையாமல் சில போர்க்குறிப்புக்களையே நுவலுகின்றன. சமயக்கிரியைகள் விழாக்கள் முதலியவற்றைப்பற்றிச் சில குறிப்புக்கள் குறிக்கப்பட்டன. காரண காரிய முறையாகச் சரித்திரங்கள் ஆராயப்படவில்லை. தோற்புத்தகங்களே உரோமருடைய ஏடுகளென்பது அறியற்பாலது. இவ்வரலாற்றில் கி. மு. 203-ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த புலவர்களைப்பற்றியே செப்பினோம். பெரும்புலவர்கள் தோன்றியகாலம் பிற்காலமாகையால் இலத்தீன் செம்மொழிநூல் வரலாற்றைப் பின்னர்க் கூறுவோம்.

கமவியக்கம்.

உரோமர் கி. மு. 2-ஆம் நூற்றூண்டில் இத்தாலியாதேசம் முழுவதும் பரவியிருந்தமையால் வகுப்பினர்சபை அடிக்கடிகூட வசதியில்லாதிருந்தது. மேன்மக்கட்சபை பல அதிகாரங்களையும் உரிமைகளையும் கவர்ந்தது. பொருளீட்டலும் காத்தலும் வகுத்தலும் மேன்மக்கட்சபையின் உரிமையாயின. சமயக்கிரியைகள் வழிபாடு முதலியவற்றின் பிரமாணங்களும் மேன்மக்களின் கொள்கைப்படியே விதிக்கப்பட்டன. போர்ப்படை சேர்ப்பதும் தலைவரை

நியமிப்பதும் சமாதான உடன்படிக்கைகள் செய்வதுமாகிய பல அதிகாரங்களையும் மேன்மக்கட்சபையே நடத்தியது. மேன்மக்கட்சபை மேன்மக்களின் நன்மைகளையே கருதியதொழியப் பொது மக்களின் முன்னேற்றத்தைப் பொருட்படுத்தவில்லை. கீழ்மக்கள் மேன்மக்களோடு கலகப்பட்டுக்கொண்டே யிருந்துவந்தனர். கி.மு. 180-ஆம் ஆண்டு வில்லியா அஞலிஸ் என்பவனுடைய கட்டளையால் போரில் சேவியாத பத்துக்குடிகள் அரசாங்கத் தலைவராதற்கும் உத்தியோகத்தராதற்கும் உரிமையுடையரல்லர் எனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. அன்றியும் முதன்முதல் பொருட்கணக்கராகி இருவருடம் கழிந்தபின் கீழ்த்தலைவராகியோரே பின் இருவருடம் கழிந்தபின் இணைத்தலைவராதற்கு உரிமையுடையோரெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு உத்தியோகத்தையும் நடத்தியபின் இரண்டுவருடகாலம் கழிந்தபின்னரே ஒருவன் மற்றொரு உத்தியோகத்தனுகத் தெரிந்தெடுக்கப்படலாம். ஒருவன் பொருட்கணக்கனுதற்கு 28-ஆண்டு செல்லவேண்டுமாதலால், இணைத்தலைவன் ஆதற்கு 34 வயதினனுதல்வேண்டும்.

இனி ஹனிபாலின் யுத்தகாலத்தில் வயல்கள் செய்கையின்றிப் பாழாகியமையாலும் கிராமங்கள் எரிக்கப்பட்டமையாலும் கமக்காரர் தம் நிலைகெட்டுக் குன்றினர். சிறு கமக்காரர் குன்ற, மேன்மக்கட் செல்வர்கள் வயல்களைப் பெற்றுப் பயிர்விளைவியாமல் ஆடுமாடு மேய்ப்பிக்கத்தொடங்கினார்கள். அடிமைகளையே மேய்ப்போராக அமைத்தினராகையால் சிறு கமக்காரர் தொழிலற்றனர். அடிமைகளும், கீழ்மக்களும் ஊண் உடை துயிலின்றி அனுருற்றுத் திரிந்தனர் என மொம்ஸன் என்பார் கூறுகின்றனர். அடிமைகள் மிக மலிவாகக் கிடைத்தனராகையால் மேன்மக்கள் நூற்றுக்கணக்கான அடிமைகளை வைத்திருந்தனர். அடிமைகள் மலியக், கூலிக்கு வேலைசெய்து வாழ்ந்தோர் தெருக்களில் முயற்சியின்றி அலைந்து திரிந்தனர். இங்ஙனம் சிறு கமக்காரர் நிலமிழந்து தொழிலற்றுக் கடன்பட்டுச் சிறைச்சாலையில் வருந்தினர். தொழிலற்றோரே நகர வீதிகளில் உலாவித்திரிந்தனர். இத்தாலியாதேசத்துப் பலநாடுகளிலும் தொழிலற்ற கீழ்மக்கள் உரோமாபுரத்துக்குச் சென்று செல்வர்களிடம் ஊண் உடை முதலியவை பெற்றுத் தெருக்களில்

துயின்றனர். இத்தகையோரின் பழக்கவழக்கங்கள் கெடுதல் ஆச்சரியமன்று. இத்தகையோர் பொருளுக்காக எத்தன்மையான தீயசெயல்களையும் செய்யும் தீவினையாளராயினர். தெருக்களில் வசிக்கும் மக்கள் தமக்கு ஊணும் உடையும் விளையாட்டுக்காட்சியும் அளித்தாற்போதுமெனத் தெருக்களில் இரந்து திரிந்தனர். தலைவராவோர் தெருவில் வசிக்கும் மக்களால் தாம் தெரிந்தெடுக்கப்பெறுதற்காக அவர்களுக்குத் தேர்தல் நிகழுங்காலத்தில் உணவூட்டியும் காட்சிகள் காட்டியும் இன்புறுவித்தார்கள். கொலைக்குத் தீர்க்கப்பட்டோர் புலி சிங்கம் கரடி முதலிய விலங்குகளின் மத்தியில் இடப்பட்டவராய் வருந்துவதை உரோமர் பார்த்துக் களித்தார்கள். வாட்போர்க்காட்சி காண்பதற்காக அடிமைகளை வாட்போரிற் பழக்கினார்கள். கீழ்மக்கள் இத்தகைய வீண்விளையாட்டுக்களைக் கண்குளிரக்கண்டு காலம் கழித்தனர். இவ்வாறு தெருவில்வசிக்கும் மக்கள் மிகப்பெருகிக் கலகம் விளைத்தற்குத் தருணம்பார்த்திருந்தனர். மேன்மக்கட் சபையினரைக் குற்றங்கூறி வைதற்கும் முற்பட்டனர். கீழ்மக்களின்நிலைமையையுணர்ந்த சில தேசநேசர் சிறுகமங்களில் அவர்களைச் சிறுகமக்காரராக நாட்டமுயன்றனர்.

உரோமருடைய ஆட்சிநாடுகள் சிற்சில உரிமைகளைமாத்திரம் பெற்றுத் துணைநாடு, திறைதரும்நாடு, சுயாதீனநாடு எனப் பல பிரிவினவாயின. சில நாடுகள் சுயாதீனநாடுகள். சுயாதீனநாடுகள் துணைநாடுகள் எனவும்படும். துணைநாட்டோர் தத்தம் ஊருக்கேற்ற கட்டளைகளை ஆக்கி உண்ணாட்டு அரசியலை நடத்தினார்கள். துணைநாடுகள் திறைகொடாதிருத்தற்கு உரிய உடன்படிக்கையுடையன. சிற்சில துணைநாட்டோர் திறைகொடாதாராயினும் எழுத்து உடன்படிக்கையால் உரிமைபெறாமையால் தம் சுயாதீனத்தை இழப்பினும் இழப்பர். மேன்மக்கட்சபை ஆட்சிநாடுகளில் தாம் எண்ணியவாறு அரசுசெலுத்தலாம். திறையளிக்கும் நாடுகளை ஆளும் தலைவர்கள் தாம் எண்ணியவாறு ஆட்சிசெய்து பொருளீட்டலாம். திரவியம் தேடல் நோக்கமாக இவ்வாட்சிநாடுகளுக்கு உரோமர்தலைவர் செல்லவிரும்பினர். இவ்வாட்சிநாடுகளில் உரோமர் குடியேறலாம். உரோமருடைய ஆட்சிநாடுகளை ஆண்ட

தலைவர்கள் சனங்களை நனிவருத்திப் பொருள்சேகரித்தமையால் அப்படித் திரவியங்கேடல் தண்டிக்கப்படத்தக்கசெயலென ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உரோமர் தம் ஆட்சிநாடுகளில் அரசிறைகளையும் கடமைகளையும் கூறி விற்றனர். வணிகர் அரசாங்கத்தினரிடம் கடமைவாங்கும் உரிமை பெற்றுப் பொதுமக்களிடம் அரசிறைகளைத் தாம் பெற்றனர். கீழ்மக்களைப்போல் இத்தாலியா தேசத்தோரும் மிடியுற்றனர். இத்தாலியநாடுகளில் சிறு கமக்காரர்களைக் குடியேற்றத் தேசத்தொண்டர் பலர் எழுந்தனர்.

கி. மு. 149-ஆம் ஆண்டு இறைபீரியஸ் கிராக்கஸ் என்னும் கீழ்மக்கட்காவலனொருவன் கமக்காரர் நயம் கருதும் பிரேரணை யொன்றைப் பிரேரித்தான். அது, செல்வரின் கமங்களில் தொழில் செய்வோரில் இரண்டில் ஒருபங்கினர் சுயாதீனமுடைய உரோமராக இருத்தல்வேண்டுமென்பதும் பொதுமக்களுக்குப் பொ[illegible] நிலங்களைப் பங்கிட்டுக்கொடுத்தற்கு ஒரு சபை ஏற்படுத்தப்[illegible] வேண்டுமென்பதும், ஒரு உரோமனும் ஐந்நூறு ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்திருக்கப்படாதென்பதும் ஆம். இப்பிரேரணையை மேன்மக்களின் தூண்டுகோலால் ஒக்ராவியஸ் என்னும் கீழ்மக்கட்காவலன் எதிர்த்தான். யாதியாது கீழ்மக்கட் காவலன் ஒருவனால் தடுக்கப்படுகிறதோ அது அது பிரமாணமாகாது என்பது உரோமர் அரசியல்முறையாகலாற் கிராக்கஸ் ஒன்றுஞ் செய்ய இயலாமல் முனிந்து தலைவர்களின் பிரேரணைகள் யாவற்றையுந் தடுத்தான். இது நிற்க; பேர்காமத்துமன்னன் அத்தாலஸ் தன் மரணசாதனத்தால் தனதுநாட்டை உரோமருக்கு அளித்தான். கிராக்கஸ் அந்நாட்டை உரோமர் படைவீரருக்கு அளிக்க எண்ணினன். கமவியக்கத்தைத் தொடங்கிப் பொதுமக்களுக்காக முயன்றமையால் பொதுமக்கள் அடுத்தவாண்டும் தன்னைக் காவலனாகத் தெரிந்தெடுப்பார்களெனக் கிராக்கஸ் எதிர்பார்த்திருந்தான். நசிக்கா என்போன் தேசநேசன் கிராக்கனைக் கொன்றான். கி. மு. 131-ஆம் ஆண்டில் அற்றலஸ் என்போன் மகன் அரிஸ்தோனிக்கஸ் பேர்காமம் தனக்கு உரியதெனக்கூறிப் போருக்கு எத்தனித்தான். லூகியஸ் கிரசஸ் என்னும் உரோமர்தலைவன் பேர்காமத்துக்குச் சென்று பொருது தோல்வியடைந்தான். அடுத்த

ஆண்டு பேர்ப்பேன்ஞு என்பான் சென்று பேர்காமத்தை ஆட்சி நாடாக்கினுன். கி. மு. 123-ஆம் ஆண்டு கிராக்கஸ் என்பவன் மகன் காயஸ்கிராக்கஸ் என்பான் தந்தையெடுத்த தொண்டைத் தான் செய்யத் தொடங்கினுன். காயஸ்கிராக்கஸின் பிரேரணைகள் வருமாறு:—

1. அரசாங்கத்தினர் பொதுஜனங்களுக்குத் தானியத்தைக் கடைவிலையினும் குறைந்தவிலைக்கு விற்கவேண்டும்

2. கமப்பிரமாணம் கீழ்மக்கட்சபையங்கீகரித்தபின் மேன் மக்கட்சபையால் அங்கிகரிக்கப்படவேண்டும்.

3. நல்கூர்ந்த இத்தாலியரை இராறந்தம் காதாக்கோ முத லிய இடங்களிற் குடியேற்றவேண்டும்.

4. படையிற்சேவைசெய்யுங்காலம் குறைக்கப்படவேண்டும்.

5. பொருள்வரிகளைக் கடமைக்கு மேலதிகமாகப் பெற்று ஆளுநாட்டோரைத் துன்புறுத்தும் தலைவர்களைத் தண்டிக்க வேண்டும்.

6. சின்ஞசியாநாட்டு அரசிறைகளை உரோமாபுரத்தில் விற்க வேண்டும். (காயஸ் கிராக்கஸ் நடுப்பிரிவினரைக் கீழ்மக்கள் பக்கத் துக்குத் திருப்புதற்காக இந்த ஆறுத்தீர்மானத்தை பிரேரித்தான்).

7. இத்தாலியருக்கு உரோமர்குடியாகும் உரிமைகளை அளிக்கவேண்டும். (இந்த ஏழாம் தீர்மானத்தால் நடுப்பிரிவினர் காயஸ்கிராக்கஸ் என்பவனுக்கு விரோதிகளாஞர்கள்.)

இத்தாலியருக்கு உரிமையளித்தலை உரோமர்கீழ்மக்கள் விரும்பவில்லை. கி. மு. 121-ஆம் ஆண்டு காயஸ் கிராக்கனைக் கலகமொன்றிற் கொன்றனர். காயஸ் இறந்தபின் மேற்காட்டிய பிரேரணைகளை மேன்மக்கள் பொருட்படுத்தாதுவிட்டனர். காயஸ் தூர்த்தரையும் தெருவில் வசிக்கும் மக்களையும் கமக்காரராக்க முயன்று தன்னுயிரையும் இழந்தான்.

[தொடரும்.]

நம் முன்னோர்கள் இயற்றிய

ராஜ நீதி நூல்கள்

(ஓர் ஆராய்ச்சி)

[கோவை. திரு. சி. து. நாராயணசாமி முதலியார்.]

உசஎ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

கௌடில்யரது நூலிலுள்ள பாகங்களுக்கு 'அதிகரணம்' என்று பெயர். அதிகரணம் என்றால், நிலைக்களம் என்பது பொருள். அந்நூலில் பதினேழு நிலைக்களங்கள் இருக்கின்றன. அவைகளில் அத்யக்ஷப்பிரசாரம், தர்மஸ்தீபம், கண்டகசோதனம், யோகவ்ருத்தம், சங்கவ்ருத்தம், ஔபநிஷதிகம், தந்திரயுக்தி என்ற ஏழு அதிகாரங்கள் பிரதானமானவை. இவற்றில் ஆறு அதிகாரங்களைக் காமந்தகர் முழுதும் விலக்கிவிட்டுக் "கண்டகசோதனம்" என்ற அதிகரணத்தை மட்டும் தமது நூலில் எடுத்தாண்டிருக்கின்றனர். அந்நூலிற் காணும் அமிசங்களை இவர், கௌடில்யருடையயோக வ்ருத்தம் என்ற அதிகரணத்திலிருந்து கிரகித்திருக்கவேண்டுமென ஊகிக்க இடமிருக்கிறது. அல்லாமலும், இராசத்துரோகம் பிரஜாத் துரோகம் செய்கிறவர்களைத் தாழ்ந்த மக்கள் என்றும், அவர்களைத் தண்டித்தல் அவசியமானதென்றும் கூறுவது கௌடில்யரது சித்தாந்தம். காமந்தகர், இவற்றிற்கு உடன்படாது, 'இராஜத்துரோகி ஒருவனே கீழ்மகன் என்று கருதக்கூடியவன்' என்று தமது கருத்தை தமது நீதிசாரத்தில் தெளிவுபெற விளக்கியிருக்கின்றனர். மற்றும் இவ்விஷயத்திற்கு அநுகுணமாக யோகவ்ருத்தத்தில், 'அநுஜீவ வ்ருத்தப்பிரகரணத்தைச்' சற்று விரிவுபடுத்தி அதில் தமது கொள்கையை நிலைநாட்டியும் இருக்கின்றனர்.

எஞ்சிய அதிகரணங்களைத் தம் நூலில் எடுத்து விவரிக்காமலே காமந்தகர் விட்டதற்கு ஏதேனும் காரணம் கருதுவதாயின், அது அப்பிரதானமாக இருக்கவேண்டுமென அவர் எண்ணியிருக்கவேண்டும்.

'தந்திரயுக்தி' என்ற அதிகாரணத்தில் தாம் உபயோகித்துள்ள பரிபாஷைகளின் பொருள்களைக் கௌடில்யர் தெளிவாக விளக்கியிருக்கின்றனர். ஆயின், காமந்தகர் அப்பகுதியைத் தம் நூலில் எடுத்தாளாமல் விடுத்துள்ளனர். அவர் அங்ஙனம் செய்தது நியாயமே. ஏனெனின், 'ஔபநிஷதிகம்' என்ற அதிகாரணத்தில், 'அரசன், தர்மம் தவறிய பகைவர்களிடத்தில் உபயோகிக்க வேண்டிய தண்டோபாயத்தை விளக்கிக் கூறியிருப்பதனாலும் அது பொது அநுஷ்டானத்தில் இருக்கக்கூடியதன்றாதலாலும் நீதிசாரமாகிய தமது சிறு நூலில் அதைச் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லையென எண்ணியதனால் என்க. மற்றும் காமந்தகரால் விளக்கப்பட்டுள்ள அதிகாரணங்களுக்கும் வாசகர் மேற்காட்டிய காரணத்தையே கொள்வாராக. ஆனால் 'தர்மஸ்தீபம்' 'கண்டக சோதனம்' என்கின்ற அதிகாரணங்களைக் காமந்தகர் தமது நூலில் சேர்க்காமல் விட்டதற்குக் காரணங்கூறுகின்றனர். அக்காரணம், இவையிரண்டும் நியாய சாகைக்குச் சம்பந்தப்பட்டவை; இவ் விஷயங்களை விரிவாக விவரிப்பது ஆசாரத்திற்கு எற்றது; அன்றியும், தமது காலத்தில் ஸ்மிருதி நூல்களின் தொகை அதிகமாயிருந்ததனாலும், ஸ்மிருதி சூத்திரங்களைப் பற்றி வாதப் பிரதிவாதங்களை நிர்ணயிப்பது சர்வசாதாரணமாயிருந்ததனாலும் நீதி சாஸ்திரக்கிரந்தத்தில் இவைபற்றிக் கூறுதற்கு அவசியமில்லையென்பதே. 'சங்கவ்ருத்தம்' என்ற அதிகாரணத்திற்குங் கூட மேற்கூறிய காரணத்தையே கொள்வது பொருந்தும்.

மற்றும், 'அத்யக்ஷப்பிரசாரம்' 'யோகவ்ருத்தம்' என்ற அதிகாரணங்களில் அரசியல் நிர்வாகம்பற்றிய ஆராய்ச்சிகள் மிகவும் பிரதானமாயுள்ளன. இப்பிரதான பாகங்களைக்கூடக் காமாந்தகர் தமது நூலிற் குறிப்பிடாமல் விட்டிருக்கின்றனர். இங்ஙனம் விட்டதற்குத் தகுந்தகாரணங்கள் இருக்கவேண்டும். ஆனால், கௌடில்யர் இவ்வதிகாரணங்களில் அரசாங்க நிர்வாகங்களுக்கு முக்கியமான அங்கங்கள் யாவை? அவ் அங்கத்தினர்கள் செய்யவேண்டிய காரியாதிகள் யாவை? ஆட்சிமுறை எவ்விதம் இருக்கவேண்டும்?

அரசியல் நிர்வாகிகளால் நாட்டுக்கு நஷ்டமுண்டாகாமல் பாதுகாப்பதற்குரிய முன்னேற்பாடுகள் எவை? என்பனபற்றிய செய்திகளையும் தமது நூலில் தெளிவாக விவரித்திருக்கின்றனர்.

"பூசம்பாதனமும், பூமிபரிபாலனமும்" இராஜதர்மங்களென்று சாஸ்திரிகளனைவரும் அங்கீகரித்திருக்கின்றனர். மேற்குறித்த அமிசங்கள் யாவும் பரிபாலனத்தைச் சார்ந்தவை. ஆனால், காமந்தகரின் நூலைக் கவனத்துடன் படிக்கும்போது, பரிபாலனத்தைவிடச் சம்பாதனமே பிரதானமாக அவர் கொண்டனரென்று தோன்றாமற்போகாது. பகைவர்களையும் தம்வசப்படுத்திக்கொண்டு இராஜ்யத்தை விஸ்தரிப்பதற்கு வேண்டிய மார்க்கத்தையுபதேசிப்பதே சாஸ்திரம் கற்றவர்களது கர்த்தவ்யமென்பது அவரது உத்தேசம். இதுவன்றிப் பரிபாலனத்தின் வகையனைத்தும் அரசன்மீது விழுந்த பாரம்; அரசன் யோக்கியனாயிருப்பின் அதிகாரிகளும் ஒழுக்கமுடையராயிருப்பர். அரசன் யோக்கியனாவதற்குத் தகுந்த வழிவகைகளைக் காமந்தகர் தமது நூலில் விவரமாகக்கூறியிருக்கின்றனர். ஆகலால், அதிகாரிகளைக்குறித்துக் கூறவேண்டியதெதுவும் இல்லையென்பது காமந்தகரது கருத்து. இவ்விரண்டு காரணங்களினால், கௌடில்யர் முதன்மையாகக் குறித்த பகுதிகளைக் காமந்தகர் ஒதுக்கிவைத்தனர். இதன்மூலமாகக் காமந்தகரது நீதிசாரத்தினால் ஏற்படக்கூடிய பிரயோஜனமும் சிறிதளவு குறைந்துபோயிற்றென்று கூறாமலிருக்கக்கூடவில்லை.

[தொடரும்.]

ஸ்ரீ:

புறத்திரட்டு.

புறத்திரட்டென்பது மிகவும் அரியதொரு தமிழிலக்கியத் தொகைநூலாகும். இஃது இற்றைக்கு ஐந்நூறாண்டு பழமை வாய்ந்ததென்பர். அறம், பொருள், காமம்: என்ற முப்பாலுள் கடவுள்வாழ்த்துமுதல் கைக்கிளை யீறாய நூற்றுமுப்பத்திரண்டதிகாரங்களில் ஆயிரத்தைந்நூற்றெழுபது செய்யுட்களுடைத்தாய் இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது.

இதன் செய்யுட்கள் மிகச்சிறந்த சான்றோரிலக்கியங்களினின்று திரட்டப்பெற்றுள்ளமையால், இது கற்போர்க்கு நல்லறிவூட்டி உறுதிகாட்டுவதிற் றலைசிறந்துநிற்பதாகும். தமிழ்க்கவிகளின் விழுப்பெருஞ்சுவை நுகர்தற்கும் இந்நூல் ஓர் உரையாணியாய்த் திகழ்கின்றதென்கை மிகையாகாது. ஒருவர் மிக்க சுவையுறப் பேசவும் எழுதவும் வல்லுநராதல் இந்நூற்பயிற்சியான் இனிதின் இயலும். பல்வேறான எல்லா நூலினையும் ஓதியுணரப் போதிய அறிவாற்றல் அவகாசம் பெறாதோரும் எளிதிற் பயன்றுய்க்கு முறையில் இஃது அமைந்துள்ளதாகையால் யாவரும் இதனை மிக விரும்பி மேற்கோடல் ஒருதலை.

இவ்வாற்றான் மிகப் பழங்காலத்திலேயே இந்நூல் தமிழ்மக்களின் பேராதரவுபெற்றிருந்ததென்று தெரிகின்றது. இப் புறத்திரட்டின் சுருக்கம் என வேறு இரண்டு நூல்கள் அப்பொழுதே வழங்கவும் தலைப்பட்டன. அன்றியும், அவற்றிலொன்று பிரசங்காபரணம் என்று பெரும்பெயர் சூட்டப்பெற்றும் விளங்கிற்றெனின், இந்நூலாற் கொள்ளும் பயன் எத்துணைத்தென்பதைப் பிறிதோராற்றாற் பேசவும்வேண்டுமோ?

இது நிற்க. இதன் செய்யுட்கள் யாவும் இன்ன முதனூலைச் சார்ந்தனவென்று குறிக்கப்பெற்றுள்ளமையால், இது தமிழ்நூல் வரலாற்றாராய்ச்சிக்கு உறுதுணையாய் உதவவல்லது. ஆசிரியமாலை, இரும்பல்காஞ்சி, நாரதசரிதை, சாந்திபுராணம், பெரும்பொருள் விளக்கம்: என்பனவாக வேறுவழியிற் பெயருமறியலாகாது மறைதற்குரிய நூல்கள் பல இதனால் வெளிப்படையாய் அறியப்பட்டன. குண்டலகேசி, தகடூர்யாத்திரை, முத்தொள்ளாயிரம், வளையாபதி: என்பனவாகப் பெயரையன்றி வேறறியவியலாத நூல்கள் பல

இதனாற் சிறிது விவரமறியக்கிடந்தன. பதிற்றுப்பத்து, பரிபாடல், பாரதம், சிறுபஞ்சமூலம்: என்பனவாக இக்காலம் வழக்கிலுள்ள நூல்களிற் சிதைந்தொழிந்த பகுதிகள்சில இதனால் தெளிய விளங்கினவும் உள. களவழி, பழமொழி, சிந்தாமணி, சூளாமணி, இராமாயணம்: என்பனவாகச் சிதைவின்றி முழுமையும் பதிக்கப் பெற்றுள்ள நூல்களில் இதுகாறும் சேராமல் விடுபட்ட செய்யுட்க ளென்று இதனால் உய்த்துணரப்படுவனவும் சிலவுள. இவையே யன்றிப் பதினெண்கீழ்க்கணக்கு முதலிய எத்துணையோ பல பழஞ் செய்யுட்களின் சுத்தபாடம் நிச்சயஞ்செய்து நிறுவுவதற்கும் இந் நூற்றிரட்டுப் பெரிதும் கருவியாய் அமைகின்றது.

இங்ஙனமாகத் தமிழ்வாணருக்கு இப்புறத்திரட்டா லெய்தும் பயன் மிகப் பல என்னலாம். மற்றும் இதன் அருமைபெருமைகள் ஈண்டே அளவிடற்கரியவாகையால் விரிவஞ்சி விடப்பட்டன. ஸ்ரீமஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் புறநானூற்றுப் பதிப்புரையில் "புறத்திரட்டென்னும் தொகைநூலிலும் இந்நூல் மூலமும் உரைமுதலியனவும் அடைந்த திருத்தங்கள் பல" என்றெழுதியுள்ளார்கள். அன்றியும், அவர்கள் இத் திரட்டைக் குறித்து, 'இது எனக்குக் கண்ணைக்கொடுத்த நூல்' எனப் பாராட்டியதுண்டென்று சொல்லப்படுகிறது. ஐயரவர்க ளால் இங்ஙனம் மதிப்புப்பெற்றமையே இதன்பெருமைக்குப் போதிய சான்றாயுள்ளது.

இங்ஙனம் கற்பார்க் கெளிதாவான்வேண்டி இவ்வரிய தொகை நூல் இயன்றுள்ளதாயினும், அச்சேறாமையின் இதன்பயன் பலர்க் கும் எய்தல் அரிதாயிற்று. இப்பெருங்குறை நீக்கும்பொருட்டு, இதுபொழுது சென்னைச் சருவகலாசாலையின் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் ஸ்ரீமாந். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் (B.A., B.L.) முன் வந்துதவியுள்ளார்கள். இதனைப் பதிப்பிக்கும் பெரும்பேறு பிள்ளை யவர்கட்கே வாய்த்தது, தமிழ்ப்புலவர் பிறரும் பெரிதும் விழையத் தக்கதொன்றாம்.

இஞ்ஞான்று புதுவதாக நூலியற்றி உலகுக்களிக்கும் உப காரத்தினும் பழம்பெருநூலினைப் பரிசோதித்துவெளிப்படுத்தல் பேருபகாரமுடைத் தென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இச்சீரிய பணியினைச் செவ்வனம் ஆற்றுதல் ஒருசிலர்க்கன்றி எல்லார்க்கும்

எளிதன்று. ஆயினும், இத்துறையில் ஸ்ரீமாந். பிள்ளையவர்கள் சிறக்க வெற்றியுற்றுநிற்கின்றனர். புறத்திரட்டென்னுங் காவியப் பழங்கோயிலை, அதன் சீர்மை சிறிதுங் குன்றாவாறு புதுநலம்பெறப் புனைந்துதந்த புகழ்க்கு அவர்கள் மிகத் தகுதிசான்றவராவர். அவர்களைத் தமிழாராய்ச்சித் தலைவராகப்பெற்ற சருவகலாசங்கமும் இந்நூற்பதிப்பாற் பெரும்பேறு பெற்றதாகிறது.

இதன் பதிப்பாளரா லெழுதப்பெற்ற சுருங்கிய ஆங்கிலமுன்னுரையும், மிக விரிந்த தமிழ்நூன்முகமும், மற்றும் சில அநுபந்தங்களும் இப்புத்தகத்திலமைந்தனவாய் அழகுக்கு அழகுசெய்கின்றன. பிரதிபேதங்களனைத்தும் ஒன்றொழியாமல் அவ்வச் செய்யுளின் அடிக்குறிப்பாக ஒவ்வொருதாளின்கீழும் தரப்பட்டுள்ளன. இஃதொரு புதியமுறையாயினும், பயில்வோர் தாந் தாம் அறிவகையாற் பாடங்கொள்ள வழிகாட்டியாகின்றது.

இது நிற்க; பிள்ளையவர்கள் தம் நுண்ணறிவுகொண்டு அரிதின் ஆராய்ந்தெழுதியுள்ள நூன்முகத்தின் சீர்மை வேறாகவைத்துப் போற்றத்தக்கது. தமிழிலக்கியவரலாற்றில் தொகைநூல்களைப்பற்றிய பகுதியை இவ்வாராய்ச்சி நன்கு நிரப்புகின்றதென்னலாம். அதற்கு இதுவே கட்டளையாய்நின்று துணைபுரியவல்லது. இதுகாறும் பெயர்மாத்திரையன்றி யறியப்பெறாதுகிடந்த தமிழ் நூல்கள் பலவற்றிற்கு விவரமான வரலாறுகளை உய்த்துணர்ந்து இயைபுறத்தொகுத்தெழுதியிருக்கும்பகுதி படிப்போர்க்குஇறும்பூதளிக்கின்றது.

பலசொல்லியென்! பிள்ளையவர்களின் அறிவாற்றலோடு கூடிய பெருந்தகைமை இந்நூற்பதிப்புவாயிலாய் விளக்கமுற்றதென்னலாம். இவர்கள்மாட்டுத் தமிழுலகியற்றுங் கைம்மாறு யாதுளது? இன்னோரன்னநூல்கள் பலவற்றைப் பரிசோதித்துதவுமாறு அன்னார்க்கு உடனலங்குன்றா நீடிய ஆயுளளிப்பான்வேண்டிக் கடவுளை வழுத்துவதல்லது பிறிதில்லை.

இருநூற்றெண்பதுபக்கங்களில் உறுதியான தாளில் நன்றாக அச்சிட்டு அழகாகப் பைண்டுசெய்த இப் புத்தகத்தின் விலை ரூபா 2—8—0; சென்னைச்சருவகலாசாலையின் பிரசுராலயத்திற் பெறலாம்.

பத்திராசிரியர்.

ஒரு பெரியதிருமடற் கதை.

திருமங்கைமன்னன் அருளிச்செய்த பெரியதிருமடலில் பின் வருமாறு காணப்படுகிறது:—

'பின்னுங் கருநெடுங்கட் செவ்வாய்ப் பிணைநோக்கின்
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி யென்றுரைக்கும்
கன்னிதன் இன்னுயிராம் காதலனைக் காணாது
தன்னுடைய முன்றோன்றல் கொண்டேகத் தான்சென்றங்
கன்னவனை நோக்கா தழித்துரப்பி வாளமருட்
கன்னவிறோட் காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்ப்
பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே' (கண்ணி 52—55.)

இந்தக் கண்ணிகட்கு அபாரகருணாஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை, 'அதற்குமேல் கறுத்துநீண்ட கண்களையும் சிவந்த அதரத்தையும் மானின் நோக்குப்போன்ற நோக்கையும் மின்னைப் போல் சிறுத்திருக்கிற இடையையுமுடைய வேகவதியென்று சொல்லப்படுகிற கன்னிகையானவள், தன்னுடைய மூத்தவன் தன்னுடைய இனியபிராணனாகிய ப்ரியனைக் காணவொட்டாமல் தன்னைக் கொண்டுபோக அவ்வவஸ்தையில் தன் ஸ்திரீத்வத்தை அழியச்செய்து, அப்படிச்செய்த அந்தத் தமயனை மதியாமல் வ்யாகுலப்படுத்தி விளங்குகிற யுத்தத்தில் தான்போய்க் கல்லோடு ஸமானமாகச் சொல்லப்பட்ட த்ருடதரமான தோளையுடைய யுவாவானவனைப் பாணிக்ரகணம்செய்து திரும்பி இருப்பிடம்சென்று ஸ்ப்ருஹணீயமாகச் சொல்லப்பட்ட அவனுடைய சரீரத்தை ஆலிங்கனம்செய்துகொள்ளவில்லையோ' என்று உரைகண்டருளினார்.

இதனிற்கண்ட, 'வேகவதி என்னுங் கன்னிகையுடைய கதை தெரியாது' என்று எழுதுவர் அரும்பத உரைகாரர்.

கௌசாம்பிநகரத்தரசனான உதயணன் மகன் நரவாணதத்தன் மதனமஞ்சுகை என்ற கணிகையை மணந்து சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒருநாள் நீர்விழா நடந்தது. அதனைக்காண

மானசவேகன் என்ற விஞ்சையன் கௌசாம்பிநகர்க்கு வந்திருந்தான். மதனமஞ்சுகையைக் கண்ட அந்த வித்தியாதரன் அவளழகில் ஈடுபட்டு அவளைக் கவர்ந்துசெல்லச் சமயம்பார்த்துக்கொண்டிருந்தான். பூம்பொழில் ஒன்றில் நரவாணனும் மதனமஞ்சுகையும் துயிலுகையில், கந்தருவன் அரசகுமாரனை நன்ருகத் துயிலச்செய்து மதனமஞ்சுகையை வித்தியாதரலோகத்துக்குத் தூக்கிச்சென்ருன். அவ்விடத்தில் விஞ்சையன் மதனமஞ்சுகை தனக்கு இணங்கும்படி பலவிதமாக முயன்றும் அவள் இணங்கவில்லை. விஞ்சையனுக்கு இருந்த சாபமொன்ருல் அவன் மதனமஞ்சுகையைப் பலவந்தப்படுத்தவுமுடியவில்லை. ஆனல் அவளை இணக்குவிக்கும்படி தன் தங்கையான வேகவதியை அவளிடம் அனுப்பினன். மதனமஞ்சுகையோ எப்பொழுதும் நரவாணனையே நினைந்தவளாய் அவனது பிரதாபத்தையும் எழிலையுமே குறித்துப் பேசிக்கொண்டிருந்தாள். இதனைக்கேட்ட வேகவதிக்கு மதனமஞ்சுகையால் மேம்பாடுறக் கூறப்பட்ட கட்டழகனைக் காண வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. மேலும், மதனமஞ்சுகையும் தான் இந்த இடத்திலிருப்பதைத் தன் கணவனிடம் கூற வேண்டுமென்று வேகவதியைக் கேட்டுக்கொண்டாள்.

வேகவதிக்கு, மதனமஞ்சுகைக்கு நன்மைசெய்யவேண்டும் என்ற எண்ணம் ஒருபாலும், அப்படிப்பட்ட கட்டழகனைக் காண வேண்டுமென்ற விருப்பம் ஒருபாலும் இருந்தது. ஆகவே அவள் நரவாணனைக்கண்டு மதனமஞ்சுகையின் க்ஷேமலாபங்களைக் கூற இசைந்து கௌசாம்பிநகர்க்கு வந்தாள். இது நிற்க.

நரவாணன் கண்விழித்தபோது மதனமஞ்சுகையைக் காணுது புலம்பிக்கொண்டே கொடிவீட்டில் அலைந்துகொண்டிருந்தான். இந்தச் சமயத்திலேதான் வேகவதி கௌசாம்பிநகர்க்கு வந்தாள். அவள் நரவாணனைப் பார்த்தவுடன் அவனது அழகில் ஈடுபட்டு அவனை எவ்வாருவது அடைவது என்று தீர்மானித்தாள். உடனே மதனமஞ்சுகையின் உருவெடுத்துக்கொண்டு அரசிளங்குமாரனேடு

கூடிச் சுகிப்பாளானுள். இதனால் மதனமஞ்சுகைக்குக் கொடுத்த வாக்கையும் மறந்தாள். அவள் நரவாணனை ஒருவரம் கேட்டிருந் தாள். அது தன்னை இரவில் எக்காரணத்தைக்கொண்டும் பார்க் கக்கூடாதென்பது. அதற்கு அரசிளங்குமரன் இணங்கியிருந்தான். ஒருநாளிரவு நீர்வேட்கையால் நரவாணன் தன்மனைவியை எழுப்பி ஞன். அப்பொழுது அவன் தன்னுடன் இருந்தவள் மதனமஞ்சுகை யல்லளென்றும் வேறொரு மங்கையென்றும் கண்டான். நரவாணன் உண்மையைச் சொல்லும்படி அவளைக் கேட்கவே அவள் தன்னைக் காப்பாற்றுவதாக இருந்தால் தான் உள்ளதைச் சொல்லுவதாகக் கூறினுள். அவ்வாறே நரவாணன் அவளைக் காப்பாற்றுவதாகக் கூறினுன். அவள் தன் வரலாற்றைக் கூறினுள்.

பொழுது புலர்ந்ததும் அந்த வரலாற்றை நரவாணன் தன் தகப்பனுக்குச் சொன்னுன். அவன் இருவருக்கும் மணஞ்செய்வித் தான். இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கையில் மானசவேகன் தன் தங்கையைத் தேடினுன். அவள் விஞ்சையருலகிற் காணுமற்போக வே, ஐயமுற்றுக் கௌசாம்பிநகருக்கு வந்தான். அவ்விடத்தில் வேகவதியும் நரவாணனும் சுகித்திருப்பதைக்கண்டு மானதவேகன் பொறாமைமிக்கு நரவாணனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் சென்றுன். வேகவதி கண்விழித்து நடந்ததை அறிந்து உடனே ஆகாயத்திற்சென்று தன் கணவனைத் தூக்கிச்செல்பவன் தன் தமயனென்றுங்கூடப் பாராமல் அவனோடு பொருதாள். அதனுல் மானதவேகன் நரவாணனை விட்டுவிட வேண்டியதாயிற்று. அவன் நரவாணனை ஆகாயத்திலிருந்து கீழேவிழும்படி தள்ளினுன். ஆனுல் வேகவதியின் விச்சைவலியால் நரவாணன் உயிருடன் கீழே விழுந் தான். பின்னர் அமிர்தகதி என்னும் விஞ்சையனுல் அவன் காப் பாற்றப்பட்டான். நரவாணன் வித்தியாதரச் சக்கரவர்த்தியான போது வேகவதியையும் பின்னும் சில விஞ்சைமாதரையும் மனைவிய ராகப்பெற்று வாழ்ந்தான். இதன் விரிவை நரவாகனதத்த சரிதத் திற் காண்க.

இந்தக் கதையே பெரியதிருமடலிற் காணப்படும் கதையாகும்.

திரு. சோமசுந்தரதேசிகர்.

மாதைத் திருவேங்கடநாதர்.

திருவேங்கடநாதர் என்பார் காவேரியாற்றின்வளப்பத்தாற் செழிப்புடையதான சோழநாட்டிலே காவேரிநதிக்கு அருகிலுள்ள மாதை யென்ற மாத்தூரிலே வாழ்ந்த ஒரு சுமார்த்தப்பிராமண குடும்பத்திலே பிறந்தவராவர். இவரது தந்தையார் பெருமாளையர் எனப்பெறுவர். பெருமாளையர் பொறை வாய்மை நல்லறிவு முதலிய சீரியகுணங்கள் வாய்ந்தவர். 'அரும்பொறை வாய்மை நல் லறிவின் வேலையாய் வரும்பெருமாள்' என்பது மெய்ஞ்ஞான விளக்கம். சீலம் ஒழுக்கம் முதலியவைகளையுடைய பெருமாளையரது அருந்தவப்புதல்வராகப் பிறந்த திருவேங்கடநாதரும் தந்தையாருடைய உயர்ந்த குணங்களைப் பெற்றிருந்தனர். 'கல்விக் கெல்லை கருணைக்காகரம், பெருமாள் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய.... திருவேங்கடநாதன்' என்பது இலக்கணவிளக்கச் சிறப்புப்பாயிரம். இவர் சுமார்த்தப்பிராமணவகுப்பைச் சார்ந்தவராயினும் திருமகணாயகன் செம்பொன்னடியிணையிணையும் வணங்குஞ் சென்னியாராவார்.

மாதையென்பது திருவாமாத்தூர் எனவும், அது தென்னார்க்காடுஜில்லாவிலுள்ள விழுப்புரத்தைச் சார்ந்த திருவாமாத்தூராகுமெனவும், திருவேங்கடநாதர் காணியாளப்பிராமணர் எனவும் பிரமஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள் கூறினர்கள்.[1] இவரைப் பின்பற்றியே சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமது தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் 'இவரூர் நடுநாட்டிலுள்ள திருவாமாத்தூர்;[2] குலம் வேதியர் குலம்; சமயம் வைஷ்ணவம்' என்றும், 'திருவேங்கடநாதரூரைச் சிலர் ஆமாத்தூர் என்பர்; சிலர் மாயூரத்தருகிலுள்ள மாந்தை[3] என்பர்' என்றுங் கூறுவர்.

---

[1] செந்தமிழ் IV, 629-638; J. O. R. ii, 34-43.

[2] தமிழ்ப்புலவர்கள் சரித்திரம், பக். 119.

[3] ஷை உபக்கிரமணிகை, 11.

ஈண்டுக் கூறிய திருவாமாத்தூர் நடுநாட்டிலுள்ளதொரு சிவத் தலம். வெள்ளாற்றின் வடபாலும் பாலாற்றின் தென்பாலுமுள்ள நாட்டை நடுநாடென்பர். திருவேங்கடநாதருடைய மாதையோ சோழநாட்டிற் காவிரிக்கரையிலுள்ளதோரூர் என்று சொல்லலாம்.

'பொன்னி மாநதி புடைபரந் தோங்கலிற் புதுப்பூங்
கன்னி வாழையுந் தாழையுங் காய்க்குலைக் கமுகும்
பின்னி நீள்கதிர்ச் செந்நெலுங் கன்னலும் பிறவு
மன்னி நீடிய வளவர்சோ ணாட்டொரு வள்ளல்'

என்றும், 'மழைக்கு லந்தவழ் நெடுமதின் மாதைக்கு மன்னன்' என்றும் மெய்ஞ்ஞானவிளக்கப் பாயிரம் கூறும். 'காவேரியாற்றி னன், சோழவளநாட்டினன், தென்மாதைப்பதியான்' என்று பண விடுதூது கூறும். ஆகவே திருவேங்கடநாதரது மாதை யென்பது நடுநாடென்றும் திருமுனைப்பாடிநாடென்றும் கூறப்படும் பகுதியி லுள்ள திருவாமாத்தூரன்றென்பதும், அது சோழநாட்டின்கண் காவிரியாற்றின்மருங்குள்ளதென்பதும் தெளிவு. களத்தூர் களந்தையாயினாற்போல மாத்தூரும் மாதையென மரீஇயிற்று. இப்பெயருடைய ஊரொன்று காவிரியின் மருங்கிலே அந்தகனைக் காலாலடர்த்த திருக்கடவூருக்கு மேல்பா லிருக்கின்றது. அது அன்றுதொட்டு இன்றுகாறும் பிராமணர் வாழும் கிராமமாகவே யுளது. திருவேங்கடநாதர் சமயத்தில் வைணவரென்பதற்கும் சாதியில் காணியாளரென்பதற்கும் போதிய ஆதாரம் காணப்பட வில்லை. சுமார்த்தப்பிராமணர்கள் பூதிசாதனமுடையராயினும் வைணவப்பற்றுடையவரேயாவர். அதுகொண்டு வைணவராகக் கூற இயலாது.

திருவேங்கடநாதர் தந்தையாரைப்போலவே சீலம் ஒழுக்கம் முதலிய நற்குணங்களுடையவர். கல்வி கேள்விகளில் மேம்பா டுடையவர். இவைகளையறிந்த நாயக்கவரசர்கள் திருவேங்கடநாத ரைத் தமது காரியகர்த்தராக்கி ஒரு மண்டலத்தைப் பரிபாலிக்கச் செய்தனர். இது, 'திருமாலுலகம் செவ்விதிற் புரக்கும் திருவேங் கடநாதன்' என்று இலக்கணவிளக்கப் பாயிரமும், 'திருவேங்கட நாதமண்டலிகன்' என்று பணவிடுதூதும் கூறுமதனால் விளங்கும்.

இவர் திருநெல்வேலிஜில்லாவிலுள்ள கயத்தாற்றுச்சீமையைப் பரிபாலித்துவந்தார். அச்சீமையிலே மந்தித்தோப்பு என்றொரு கிராமமுண்டு. அதனில் சங்கரபாரதித்தம்பிரான் என்று ஒரு பெரியார் இருந்தார். அவருடைய மடத்தின் செலவுக்காகச் சகம் 1466-லே விசுவநாத நாயக்கராட்சியில் காரியகர்த்தராயிருந்த திருவேங்கட நாயக்கர் விசுவநாதநாயக்கருத்திரவுப்படி சில கிராமங்களைச் சர்வ மானியமாக விட்டார். ஆயினும், இந்தச்சர்வமானியக்கிராமத்துக்காக 20 பொன் பொறுப்புக்கட்டும்படி ஏற்பாடிருந்தது[1]. அதனைத் திருவேங்கடநாதர் நீக்கினதாக ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது[2],

'சகாத்தம் சுஙிஎஙிடு-ன் மேற் செல்லாநின்ற பிரமோதூத வருஷம் தைமீ 1வ விசுவநாதநாயக்கரய்யன்[3] திருவேங்கடநாயக்கரய்யன் காரியத்துக்கு கர்த்தரான திருவேங்கடநாதர் மந்தித்தோப்புச் சங்கரபாரதித் தம்பிரானுக்குச் சறுவமானியப்[4] பட்டயம் [5]குடுத்த படி....சீமைக்குள் மந்தித்தோப்பு முன்னாள் செகவீரராமராசாவின் பண்டாரத்திலே சங்கரபாரதித் தம்பிரானுக்குச் சறுவமானிய[4]மாகக் கட்டளையிட்டு நடத்துகி[றதற்]கு கயத்த[ாறுசீர்]மை அ...ந தறந்து கட்டிக்கொண்டு [உ௰ பொன்] வருசத்துக்கு [இ]ருபது [பொன்] தாங்களே கொடுத்துவந்ததை இப்பொழுது சறுவமானிய[4]மாகக் கட்டளையிடவேணும் என்று...நமக்குச் சொன்னபடியினாலே சுவாமி திருமலைநாயக்கரய்யனுக்குப்[6] புண்ணியமாகவும் தித்தயப்பசெட்டியாரய்யன்குமாரனச்சுத்து சீரங்கப்பசெட்டியாரய்யனுக்குப் புண்ணியமாகவும் பொ[ன் உ௰] இருபது பொன்னும் வேண்டாமென்று சறுவமானியமாகக் கட்டளையிட்டோம். இந்தப் படிக்குச் சந்திராதித்தவரை சந்ததிப் பிரவேசமே சறுவமானியமாக அனுபவித்துக்கொண்டு இப்ப[டி பூஜை]சயும் மடத்தையும் சீவிதத்தையும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகத்தில் இருக்கவும்......' என்பதாம்.

---

[1] 288 of 1928. [2] 289 of 1928. [3] மதுரை நாயக்கவரசர், 1529—1564. [4] சர்வமானிய மென வாசிக்க. [5] கோடுத்த என வாசிக்க. [6] திருமலைநாயக்கர் 1623—1659.

இதனால், திருவேங்கடநாதர், திருமலைநாயக்கர்காலத்திலே கயத்தாற்றுச்சீமையைப் பரிபாலனம்செய்துவந்தாரென்பது இனிது பெறப்படும்.

ஒருநாட்டை அரசுபுரிவது எளியகாரியமன்று. மிகுதியு மிடுக்கணுடையதேயாகும். அரசன் தக்க அமைச்சு ஒற்று முதலிய உறுதிச்சுற்றத்தோடு சூழப்பட்டிருந்தாலன்றி அரசாட்சி செங்கோன்மையுடையதும் எளியது மாகாது. அரசனும் கல்வியிலும் அரசாட்சியிலும் மேம்பாடுடையவனாக இருத்தல்வேண்டும். இத்துணைச்சிறப்போடு கல்வியிலும் வல்லவனாகவிருத்தல் சிறிதும் இயலாத காரியமாகும். அவ்வாறு கல்வியில் மேம்பாடுடையவனாக இருப்பின் அவனைச் சிறந்தவனாக உலகமும் அரசும் மதிக்கும். இத்துணைச் சிறப்புடையவராகப் பதினாறும்நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே அதிவீரராமனும் வரதுங்கராமனுமாவர். வடநாட்டிலே கிருஷ்ணதேவராயரைக் கூறல் தகும்.

பதினேழாம்நூற்றாண்டிலே வாழ்ந்தவர்களில் அநேகர் அரசர்களாயிராவிடினும் மாபெருந்தலைவர்களாக இருந்து அரசாட்சியோடு கல்வியிலும் மேம்பாடுடையராகவிருந்திருக்கின்றனர். அவர்களுள்ளே சிறந்தோராக மாதைத் திருவேங்கடநாதரையும் மாதைவேங்கடேசுரனையும் கூறல் தகும்.

'தந்திர முதுமறை தவழு நாவினன்'

'அறம்பொரு ளின்பம்வீ டாய நால்வகைத்
திறந்தெரிந் தந்நெறி செலுத்துஞ் செய்கையான்'

'மண்ணிடத் தவரவர் மதியும் மற்றவ
ரெண்ணிய வெண்ணமும் இனிய யாவையு
முண்ணில வுறவகன் றொருங்கு காட்டலாற்
கண்ணடி யாமெனக் கருதுஞ் சூழ்ச்சியான்'

'திணிபுயத் தரசர்தஞ் செம்பொன் மாமுடி
மணிநிரைத் தீபஞ்சூழ் வனசத் தாளினன்
பணிகொளெண் டிசையெனும் பாவை மார்செவிக்
கணிமலர்த் தாரென லாகுங் கீர்த்தியான்'

'..................நனியுல களித்தும்
சீதைகா தலனெனத் திசைக ளெட்டையும்
நீதியாற் புரந்துநன் னெறி நடாத்திய
வேதபாரகன்'

'பன்னரு மனுமுறை பகர்ந்த நீதியா
லன்னவன் புவிபுரந் தருளுங் காலையில்'[1]

என்று வருந்தொடர்கள் மாதைத்திருவேங்கடநாதருடைய ராஜ்ய பரிபாலன முறையை விளக்கவல்ல சான்றுகளாக நிற்கின்றன.

இவருக்குப் பிள்ளைகள் அறுவராவர். அவருள் மூத்தவர் பெயர் தெரிந்திலது. இரண்டாவது புதல்வர் வேங்கடேசையர், மூன்றாவது புதல்வர் மணிவண்ணப் பெருமாளையர், நான்காவது புதல்வர் ராஜகோபாலையர், ஐந்தாவது புதல்வர் கனகசபாபதி ஐயர், ஆறாவது புதல்வர் வேங்கடராமையர். அவருள் மூத்தவர் பெயர் கிருஷ்ணையர் என்று கூறுவர் திரு. மு. இராகவையங்காரவர்கள்[2]. அவ்வாறு கூறுதற்குரிய ஆதாரமொன்றும் காட்டப்படவில்லை. இவ் வறுவருள் வேங்கடேசையர் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தார். மணிவண்ணப் பெருமாளையர் என்பார் எண்ணெண் கலை ஞானங்களையும் அறிந்து அரங்ககிருஷ்ணபூபாலனுக்குத் தம்பி யென்று கூறும்படி அத்துணைக் கேண்மையராய் மதுரைவீட்டு வாசற்பிரதானியாக இருந்தார். இராசகோபாலையர் நாயக்கமன்ன ராட்சியிற் பிறிதொருபகுதியை ஆண்டுவந்தனர். கனகசபாபதி ஐயர் கல்வியிற்பெரியராகவிருந்தார். இச்செய்திகளைப் பணவிடு தூது மிக அழகாகக்கூறும். அவ்வடிகள்,

'.......................................முறைமுறையே
தெண்டனிடும் வாசற் றிருவேங் கடநாத
மண்டலிகன் பெற்ற வரபாலன்—பண்டைநாள்
ஆதிசுப்ர மண்ய ரமரர்சிறை மீட்கவந்து
சோதி மயவடிவாய்த் தோன்றியபின்—நீதிதிகழ்
ஆறுமுகம் வெவ்வே றவதார மாகியிந்நாள்
வீறுபுவி காக்கவந்த மேன்மைபோல்—பேறுமிகத்
தன்னுடனே யைவர் சகோதரருந் தானுமெழின்
மன்னவர்சி காமணியாய் வந்தபிரான்—மின்னு
மருக்குங் குமமார்பன் மார்க்கண்ட வாழ்வாய்
இருக்குந் துரைவேங்க டேசன்—பெருக்கமுள்ள
தேசப்ர தானமெனுந் தென்மதுரை வீட்டுக்கு

---

[1] மெய்ஞ்ஞானவிளக்கம், பாயிரம். [2] செந்தமிழ்த் தொகுதி. iv

வாசற்ப்ர தானி மகாராசன்—ராசிரிகக்
கிம்புரிமால் யானைசொன்ன கிர்ஷ்ணபூ பாலனுக்குத்
தம்பியெனா வந்த தயாளுவாய்—அம்புவியில்
எண்ணெண் கலைஞான மெல்லாந் தெளிந்தமணி
வண்ணப் பெருமாள் மகிபதியும்—தண்ணளியாய்த்
தேசமோ ராணைகொண்டு செங்கோன்மை செய்யவந்த
ராசகோ பால நராதிபனும்—நேசமிகு
துங்கனக ளங்கன் றுலங்குகன காவியப்ர
சங்கன் கனக சபாபதியும்—இங்கிதஞ்சேர்
திங்கட் டிருமுகத்திற் செங்கமலை கூத்தாடும்
வேங்கட்ட ராம விதரணனும்—இங்கிவர்கள்
பின்னுதித்த நால்வர் பிராணபதத் தம்பியரா
முன்னுதித்து வந்த முகூர்த்தவான்'

என்பனவாம். இவ்வடிகளாலே திருவேங்கடநாதையர் வேறு என்பதும், பணவிடுதூதுகொண்ட வேங்கடேசையர் வேறு என்பதும் இவர் முன்னவருடைய இரண்டாவது மைந்தரென்பதும் தெளிவான செய்திகளாம். இவ்வாறன்றி, பெருமாளையர் தனயனான திருவேங்கடநாதரும் அவருடைய இரண்டாவது புத்திரனான வேங்கடேசையரும் ஒருவரென மயங்கித் தனயனுக்குரியவெல்லாம் தந்தைக்குரியவாகக் கூறுவாருமுண்டு.

அக்காலத்திலே இவர் திருவாரூர் வைத்தியநாததேசிகரை ஆதரித்தவராதல்வேண்டும். வைத்தியநாததேசிகர் திருவேங்கடநாதையருடைய இல்லத்தில் பாடங்கற்பிக்கையில் இலக்கணபாடம் கற்பித்துவரும்போது இலக்கணவிளக்கம் இயற்றப்பட்டதாக ஒரு கன்னபரம்பரைச் செய்தியுண்டு. ஆதலினாலே திருவேங்கடநாதர் வைத்தியநாதநாவலரை ஆதரித்ததோடு அவரையே தம் மக்களுக்குத் தமிழ் கற்பிக்கும்படி செய்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. அவ்வாறு வைத்தியநாததேசிகர் போதகாசிரியராக விருந்தமையே இலக்கணவிளக்கம் மூலமும் உரையுமாக இயற்ற இடந்தந்ததாகும்.

'எழுத்துமுதன் மூன்றையும் யாவரும் தெரியத்
தொகைவகை விரியிற் பகருக வென்று
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதைய ரதிபன் வரகுண மேரு

> கல்விக் கெல்லை கருணைக் காகரம்
> பெருமான் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
> திருமா லுலகஞ் செவ்விதிற் புரக்கு
> மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்
> ஓதினனாக"[1]

என்று வைத்தியநாததேசிகர் புத்திரர் தம் புரவலரைப் பெரிதும் போற்றுவர்.

இவர் அரசாட்சியிலே தம் காலத்தைக் கழித்துவந்தாலும் ஈசனிணையடி மறவா மாண்பினராவர். இச்செய்தியை,

> 'மேயபற் பலதுறை மேற்கொண் டுய்ப்பினு
> மேயவில் வாழ்க்கையி லிருந்து மன்னதிற்
> பாயுநன் மதுமலர்ப் பதுமப் பாசடைத்
> தூயதண் புனலெனத் தோய்ந்துந் தோய்ந்திலான்'

> 'மனையறம் பூண்டுநல் வாழ்வின் வைகியு
> மனையபல் கிளைஞரோ டளவ ளாவியு
> நனியுல களித்துமெய்ஞ் ஞான மெய்திய
> சனகனைப் போலிருந் தருளுந் தன்மையான்'

என்ற மெய்ஞ்ஞானவிளக்கச்செய்யுள்கள் நன்கு விளக்கும். இவருக்கு ஞானோபதேசஞ் செய்த குரவர் இராகவானந்தர் எனப்படுவர். அவரைக் குறித்த செய்திகள் ஒன்றும் நாமறிவதற்கில்லை. ஆயினும், இக்குரவரே திருவேங்கடநாதரைப்பார்த்து 'அறம்பொருளின்பமும் அகிலத் தோர்பெறத்—திறம்படப் புரிந்த நீ வீடுந்தேர்ந் தவர்—உறும்படி ஞானநூ லொன்று சொல்கென' அவரும், மெய்ஞ் ஞானவிளக்கம் என்னும் நூலைப் 'பற்பல வருணத்தோர்க்கும் பாங் குறப் பகர்தலுற்றார்' என்று அந்நூற்பாயிரம் கூறும். மேலும் அவர் முதலில் வடமொழியிலேயே இந்நூலைச் செய்துள்ளாரென்று தமிழ் நூற்பாயிரம் கூறும்.

சென்னைக் கிறிஸ்தவகலாசாலைத்தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்து 1903-ஆம் ஆண்டிற் காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் அக்காலத்திலே நடந்துவந்த விவேகசிந்தாமணி என்ற திங்கள்வெளியீட்டிலே இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகரைக் குறித்து வரையுங்கால், 'மெய்ஞ்ஞானவிளக்க

---

[1] இலக்கணவிளக்கப் பாயிரம்.

மென்று மறுநாமத்தையுடைய பிரபோதசந்திரோதயம் நமது நாவலரை யாதரித்துவந்த திருவேங்கடநாதரால் இயற்றப்பட்டதென்று கூறிமயங்குவாருமுளர். இவ்வாறு அவர்கள் பிராந்தியடைந்ததற்குக் காரணமென்னவென்று சற்று விசாரித்துப்பார்ப்போமானல்,

போதத் தமிழ்க்கும் வடகலைக்கும் புலவோர் தமக்கும் பொருள்விரித்துச்
சீதைக் கிறைவ னெனநீதிச் செங்கோல் செலுத்தித் திசைபுரந்து
வேதப் பனுவன் மெய்ஞ்ஞான விளக்கா லுலகை விளக்குமெங்கண்
மாதைத் திருவேங் கடநாத மறையோன் வாழி வாழியவே.

என்ற ஒரு விருத்தமேயென்பது வெளிப்படும். இந்தப்பிரபந்தத்தைத் திருவேங்கடநாதர் வேண்டுகோளின்படி வைத்தியநாத நாவல ரியற்றினரென்று முன்னே கூறியிருக்கிறோம். ஆதலால் வேங்கடநாதர் ஏவுதற்கருத்தாவும், நாவலர் இயற்றுதற்கருத்தாவுமாவார்கள். இதுவுமல்லாமற் சென்னையிலிருந்த வித்வான் தாண்டவராய முதலியாருடைய பிரபோதசந்திரோதயப்பிரதியில் நாவலரியற்றினதாகக் குறிக்கப்பட்டிருப்பதனுலும், மதுரை, நெல்லை, புதுவை முதலிய விடங்களிற் கன்னபரம்பரையாக நாவலரியற்றினரென்று வழங்குவதனுலும், யாங்கூறுவதே திருவாரூர் அபிஷேகஸ்தர்கட்கும் தருமபுரவாதீனத்தார் முதலாயினர்க்கும் ஒப்பமுடிந்ததாமாதலாலும் இம்மயக்கம் தவறுயச்சிடப்பட்ட மூலம்பற்றியுற்பத்தியானது போலும்'[1] என்று எழுதுவர். நூலை வைத்தியநாததேசிகரே பாடி அவருடையபெயரால் வெளியிட்டதாக அவரது வழியில் வந்த பெரியோர்கள் சொல்ல யான் கேட்டதுண்டு. அக்கூற்றுக்குரிய அகச்சான்றுகள் பல அந்நூலிலுமுண்டு. ஆயினும்,

'அத்தகை வேதாந் தப்பா லாழியைத் தனது புந்தி
மத்தினு லுழக்கி மேனுண் மால்புல வோர்க்கு வாரிப்
புத்தமு தெடுத்தாற் போலப் பொருவிலா ஞான சார
மெத்தனை யவற்றை யெல்லா மின்புறத் திரட்டி வாங்கி'

'சகத்தொரு ப்ரபோத சந்த்ரோ தயமெனு நாட கந்தான்
மிகுத்துரை செய்த க்ருஷ்ண மிச்சிரன் ருனு நாணப்
புகழ்த்திரு வேங்க டேந்த்ரன் பூசுரர் குலத்துக் கெல்லாம்
வகுத்தகாப் பியம தாக வடமொழி யதனிற் செய்தும்'

[1] தமிழ்ப்புலவர் சரித்திரம். பக். 32-34.

'கற்பதற் கெளிதாய் நாவிற் கனிந்துதே னூற மேலாந்
தற்பரஞ் சோதி தானுய்த் தம்முளே யுதய மாகச்
சொற்பசுந் தமிழி னாலுந் தொகுத்ததை மாதை வேந்தன்
பற்பல வருணத் தோர்க்கும் பாங்குறப் பகர்த லுற்றான்'

என்பது அந் நூற்பாயிரம். தமிழினாலும் தொகுத்ததைத் திருவேங்கடநாதன் வெளியிட்டான் என்று கொள்ளின் கன்னபரம்பரைச்செய்தி உறுதிபெறும். 'தொகுத்து அதைப் பகர்தலுற்றான்' என்று கொள்வதும் இழுக்காகாது.

ஞானசோபனம் என்றொரு நூலை அவர் இயற்றியதாகக் கூறுவதுண்டு. அதன் நடைப்போக்கு மிக எளியது. அதைப் பிறரொருவர் இயற்றி இவர் பெயரால் வெளியிட்டனரோவென ஐயுற வேண்டியிருக்கிறது.

இனி இவருடைய காலம் திட்டமாகத் தெரியக் கூடியவாறு பல சாதனங்கள் அமைந்துள்ளன. முதலாவதாக இவர் கட்டளையிட்ட தான சாதனம் சகம் 1555-க்கு ஆங்கிலவாண்டு 1653-ல் வரையப்பட்டதாகும். அக்காலத்தே பாண்டிநாட்டிலே அரசு செலுத்தியவர் திருமலைநாயக்கராவர். இவரது காலம் 1623–1659-ஆம். திருவேங்கடநாதர், சொக்கநாதநாயக்கர் காலத்திலும் காரியகர்த்தராக இருந்திருக்கின்றாரென்று பணவிடுதூது கூறுகிறது. அன்றியும், இவரது இரண்டாவதுபுத்திரரான வெங்கடேசையர் அரங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கருடைய காரியகர்த்தராகத் திருநெல்வேலியிலே அரசு செலுத்தியதைப் பணவிடுதூது கூறும். திருநெல்வேலிக் கலெக்டராபீசில் சேமித்துவைக்கப் பட்டுள்ள செப்பேடொன்று நெல்லையப்பராலயத்திற்கு அரங்ககிருஷ்ணமுத்துவீரப்பநாயக்கர் திருவேங்கடநாதையர் இவர்கள் புண்ணியமாகப் பூதானஞ்செய்ததைக் குறிக்கிறது. இச் செப்பேட்டின்காலம் கொல்லமாண்டு 858 ஆகும். இது கி. பி. 1683 ஆகும். அக்காலத்திலே திருவேங்கடநாதர் வயோதிகராக இருந்திருக்கவேண்டும். அல்லது திருநாடலங்கரித்திருக்கவேண்டும்.

பின்னும், இவர் இலக்கணவிளக்கம் செய்த வைத்தியநாத தேசிகரை ஆதரித்தவராகவே, அவருடைய மாணாக்கர் பலருள்ளுஞ் சிறந்தவரான படிக்காசுப்புலவரை யாதரித்த இரகுநாத

திருமலைசேதுபதி காலத்தவராவர். இரகுநாத திருமலைசேதுபதி வாழ்ந்தகாலம் 1643–1672 ஆகவே அக்காலத்தவரே திருவேங்கடநாதர் என்பது நன்கு விளங்கும்.

ஆகவே வள்ளலான திருவேங்கடநாதையர் சோழநாட்டு மாத்தூரிற் பிறந்தவரென்பதும் பெருமாளையருடைய ஏகபுத்திரரென்பதும் இவருடைய மக்கள் அறுவரென்பதும் திருமலைநாயக்கர் சொக்கநாதநாயக்கர் காலத்திலே கயத்தாற்றுச்சீமையை யாண்டவரென்பதும் பல புலவர்களை ஆதரித்தவரென்பதும் பதினேழாநூற்றாண்டினிடைக்காலத்தவரென்பதும் பெற்றாம்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

திரு. சோமசுந்தரதேசிகர்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை ஆசிரியர் திரு. பண்டித ஹரிஹரையரவர்கள் நீண்டநாள் நோயுற்றிருந்து நிகழும் வெகுதானியஞூ வைகாசிமீ 17௳ (30—5—38) திங்கட்கிழமை காலஞ்சென்றது குறித்து மிகவும் துயரடைகிறோம்.

இவர் தமிழ்ச்சங்கக்கலாசாலையிற் பயின்று பிரவேச பால பண்டித பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்து பின் சங்கக்கலாசாலையில் உதவியாசிரியராக நியமிக்கப்பெற்று இருபத்தெட்டாண்டு பிரவேச வகுப்பு மாணவர்க்குத் திறம்படத் தமிழ்க்கல்வி புகட்டிவந்தவர். நல்லொழுக்கமிக்குடையவர். சங்கப்பரீக்ஷாதிகாரியாகவும் இருந்து உதவியவர். நாற்பத்தொன்பதாண்டு நிரம்புமுன்னரே இவரைப் பிரியநேர்ந்தது மிகவும் இரங்கத்தக்கது.

இவரைப் பிரிந்துவருந்தும் சுற்றத்தார்க்கும் நண்பினர்க்கும் நம்முடைய அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவருடைய ஆன்மா சாந்தியடைக.

பத்திராசிரியர்.